Free Circulation Germany- England
மணி: 71 - ஓசை: 293 மாசி. February. 2021

# வெற்றிமணி
Vettimaniy
ESTD 1950

27TH years IN EUROPE Successful Publishing

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன். B.F.A

Orientalisch
Textilien &
Schmuck
30 ஆவது ஆண்டு நிறைவு
தொடர் மலிவு விற்பனை

Königswall 16 (Am Hbf)
44137 Dortmund
Tel:0231 162377



## உங்கள் வாழ்க்கைத் துணைவர் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும்

Dr.IN

## அரசியல் களம்

கொழும்பிலிருந்து ஆர்.பாரதி



## covid-19 vs Teens

## இனிய காதலர் தின வாழ்த்துக்கள்




பாலு மகேந்திராவுடனான
ஓர் அனுபவப் பகிர்வு
பேராசிரியர் சி.மௌனகுரு

தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கட்டும் வெற்றிமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன விஞ்ஞானிகள் உருவாக்கிய செயற்கைச் சூரியன்









தாங்கள் உருவாக்கிய செயற்கைச் சூரியனை ஒளிர வைக்கும் முயற்சியில் சீன விஞ்ஞானிகள் 2020 இறுதியில் வெற்றி பெற்றுள்ளனர். 1999ம் ஆண்டு முதல், செயற்கைச் சூரியன் என்று அழைக்கப்படும், சோதனை ரீதியாக மேம்படுத்திய மீக்கடத்தி டோக்காமாக் என்ற இயந்திரத்தை உருவாக்கும் பணியில் சீனா ஈடுபட்டு வருகிறது.

அணுக்கரு இணைவு மூலம் சூரிய சக்தி உருவாவதுபோல, இந்த இயந்திரத்தில் செயற்கையாக சூரிய சக்தியை உருவாக்க முடியும். இதற்கான மீக்கடத்திப் பொருட்களை அமெரிக்கா தருவதாகக் கூறி பின்னர் பின்வாங்கியது. இதனையடுத்து சீன விஞ்ஞானிகளே சில ஆண்டு கால முயற்சிக்குப் பின், தரம் வாய்ந்த மீக்கடத்திப் பொருட்களை உருவாக்கி உள்ளனர். இவை அந்த இயந்திரத்தில் பொருத்தப்பட உள்ளன.

இந்தஇயந்திரம்வருகிற2025ஆம் ஆண்டுக்குள் முழுமையாகத் தயாராகிவிடும் என்றும், 2050 ஆம் ஆண்டு முதல் தொழில்முறையில் இதன் மூலமான சக்தி பயன்பாட்டுக்கு வரும் என்றும் எதிர்பாக்கப்படுகிறது. இவை சாத்தியமாகும் போது காலநிலை மாற்றங்களை இனி சீனாவே முடிவுசெய்யும். சூரியனை மட்டுமல்ல சந்திரனையும் தயாரித்துள்ளது சீனா.

எப்போதே தென்னாபிரிக்காவில் பெரும் நிலப்பரப்பைக் குத்தகைக்கு வாங்கி விவசாயம் செய்து, அதன் விளைச்சலை ஐரோப்பிய நாடுகளில் சந்தைப்படுத்துகிறது. சீனா உலகத்தை இனி தம்கட்டுப்பாட்டில் கொண்டுவரும் நாள் தொலைவில் இல்லை?














Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
ஓசை : 293



ஆரம்பம்: 1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவிக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A
Chief Edito:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333
e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276

# ஜெனீவா களம் இம்முறை யாருக்கு சாதகமாக அமையப்போகின்றது?

கொழும்பிலிருந்து
ஆர்.பாரதி

ஜெனீவாவை இலக்கு வைத்து மூன்று பிரதான தமிழ்க் கட்சிகள் இணைந்து நான்கு அம்சக் கோரிக்கை ஒன்றை முன்வைத்திருக்கும் அதே வேளையில், 'ஜெனீவாவுக்கு அஞ்சப் போவதில்லை' என வழமையான பாணியில் இறுமாப்பாக இலங்கை அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. ஜெனீவாவில் புதிய பலப்பரீட்சை ஒன்று ஆரம்பமாகிவிட்டது என்பதற்கான முன்னறிவித்தலாக இது உள்ளது.

பத்து வருடகாலமாக ஜெனீவாவில் முடியாமல் போனதை இவ்வருடத்தில் செய்துவிட முடியுமா? என்பது தான் இலங்கையின் இறுமாப்புக்குக் காரணம். அதேவேளையில், முதல் முறையாக இணைந்து தமிழ்த் தரப்பினரும், சர்வதேசத்தை தமக்குச் சாதகமாக மாற்றலலாம் என்ற நம்பிக்கையுடன் இருப்பதாகவே தெரிகின்றது. இந்தப் பின்னணியில், பெப்ரவரி இறுதி வாரத்தில் ஆரம்பமாகப் போகும் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத் தொடர் யாருக்குச் சாதகமாக அமையப்போகின்றது என்பதில் அனைவரது கவனமும் குவிந்திருக்கின்றது.

மனித உரிமைகள் பேரவையிலுள்ள 47 நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் 4 அம்சக் கோரிக்கைகளை உள்ளடக்கிய மகஜர் ஒன்றை தமிழ்க் கட்சிகள் அனுப்பிவைத்திருக்கின்றார்கள். இதில் 24 நாடுகளின் ஆதரவு கிடைத்தால், நிலைமையைத் தமக்குச் சாதகமாகக் கொண்டுவரலாம் என்பது தமிழ்த் தரப்பின் நம்பிக்கை. தொடர்ச்சியான இழுபறிகளுக்கு மத்தியில் பிரதான தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இடையில் இதற்கான உடன்படிக்கை முக்கியமான திருப்பமாகக் கருதப்படுகின்றது. அதேபோல அவர்கள் முன்வைத்திருக்கும் கோரிக்கைகளும் முக்கியமானவை.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை அமைப்பின் தலைவர் வி.எஸ்.சிவகரன் கிளிநொச்சியில் ஏற்பாடு செய்திருந்த கூட்டம் ஒன்றிலேயே, பொதுவான கோரிக்கை ஒன்றை முன்வைப்பதற்கான இணக்கம் தமிழ்க் கட்சிகளிடையே முதலில் ஏற்படுத்தப்பட்டது. அந்தக் கூட்டம் கூட, கடுமையான வாதப் பிரதிவாதங்களுக்கு மத்தியில்தான் நடைபெற்றது. இறுதியில் கொழும்பு, யாழ்ப்பாணம் என தொடர்ச்சியாக இடம்பெற்ற சந்திப்புக்களின் பின்னர் நான்கு விடயங்களை உள்ளடக்கிய கோரிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்கினேஸ்வரன் ஆகியோர் உட்பட மேலும் சில தேசியக் கட்சிகளின்



தலைவர்களும், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளும், பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இந்த ஆவணத்தில் கையொப்பமிட்டுள்ளனர். இது இப்போது பேரவையின் 47 உறுப்பு நாடுகளுக்கும் அனுப்பப்பட்டுவிட்டது.

தமிழர் தரப்பின் இந்த இணக்கப் பாட்டுக் கோரிக்கையில், 'பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கையை இணங்க வைத்து நடவடிக்கைகளை எடுப்பதற்கு கடந்த பத்து ஆண்டுகளாக ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் மேற்கொண்ட முயற்சிகள் எல்லாம் போதும். எதனையும் இலங்கை செய்யப்போவதில்லை. இனியும் இதில் மனித உரிமைகள் பேரவையில் சாதித்துச் செயலாற்றுவதற்கு எதுவுமில்லை. ஆகவே காலத்தை மேலும் வீணடிக்காமல், விடயத்தை ஐ.நா பொதுச் சபையிடமோ, பாதுகாப்புச் சபையிடமோ, சர்வதேசக் குற்றவியல் நீதி மன்றத்திடமோ கையளிக்க நடவடிக்கை எடுங்கள்' என வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

கடந்த பல வருடகாலமாக ஜெனீவாவில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களினால் இலங்கை நிலையில் மாற்றங்கள் எதனையும் ஏற்படுத்திவிட முடியவில்லை. தீர்மானங்கள் கொண்டுவரப்படும்போது அதற்கு இணை அனுசரணை வழங்குவதாகக் கூறி, களத்தில் இறங்கும் இலங்கைத் தரப்பு, தீர்மானத்தில் இருக்கக்கூடிய கடுமையான தன்மையைக் குறைப்பதில் வெற்றிபெறுகின்றது. பின்னர் அதனைக் கூட நிறைவேற்றுதில்லை. அதனால், நிலைமாறுகால நீதி என்பது தமிழர்களுக்குக் கிட்டாத ஒன்றாகவே இருந்து வருகின்றது.

ஜெனீவாவில் நிறைவேற்றப்படும் எந்தவொரு தீர்மானத்தையும் நிறைவேற்றுவதற்கு, குறிப்பிட்ட நாட்டின் ஒத்துழைப்பு இணக்கப்பாடு அவசியம். இலங்கையின் ஒத்துழைப்பு

28 ஆம் பக்கம் பார்க்க...





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சம்பவம் 06

## பூவொன்று புயலானது!

கே.எஸ்.சுதாகர்
(மெல்போர்ன்– அவுஸ்திரேலியா)



"ம்... எழும்பும்... எழும்பும்... இண்டைக்கு வலன்ரைன்ஸ் டே அல்லே!'' ஓவியாவைத் தட்டினான் பிரதீபன். ஓவியாவின் உறக்கம் கலையவில்லை.

''உங்கை பாரும் கிழவனை... இப்பவே நடை போடத் தொடங்கிவிட்டுது'' சொல்லியபடியே யன்னலுக்குள்ளால் வெளியே பார்த்தான் பிரதீபன். அவர்கள் வீட்டிற்கு நான்கு வீடுகள் தள்ளியிருக்கும் இத்தாலிய முதியவர் விறுவிறெண்டு தனது உடற்பயிற்சிக்கான நடையை ஆரம்பித்திருந்தார்.

நேரத்தைப் பார்த்தான். அதிகாலை 6 மணி. எங்குமே புலர்ந்திருந்தது.

முதியவருக்கு வயது எண்பதைத் தாண்டியிருக்கும். அவரின் மனைவி, வயது முதிர்ந்தவர்களின் காப்பகத்தில் இருக்கின்றாள்.சிலமாதங்களுக்கு முன்னர், வாயில் புக்குப்புக்கென்று புகைவிட்டபடி அவரும் நடை பயின்றவர்தான்.

மீண்டும் எழும்புமாறு ஓவியாவை ஆய்க்கினை செய்தான் பிரதீபன்.

''எழும்பி என்ன செய்யுறது? காதலர்தினமும் வருஷாவருஷம் வந்து போகுது. ஒரு பூ, எப்பவாவது வாங்கித் தந்தியளா?''

நீயே ஒரு பூ... உனக்கொரு பூவா?

''உதுக்கு மாத்திரம் குறைச்சலில்லை. கலியாணம் செய்து 25 வருஷமாகுது! நானும் ஒவ்வொரு வருஷமும் வாய்விட்டுக் கேக்கிறன். இருக்கிற றோசா மரத்திலையிருந்தாவது ஒரு பூங்கொத்து வெட்டித் தந்திருக்கிறியளா?''

பிரதீபனுக்கு அதற்கான சுரணை இன்னமும் வரவில்லை. ஒரு தடவையாவது அதையிட்டு யோசித்தும் பார்க்கவில்லை.

''ஓவியா.... சீக்கிரமா எழும்பிக் குளிச்சிட்டு வெளிக்கிடும். நல்ல ஒரு கடையிலை காலைச் சாப்பாடு புக் பண்ணியிருக்கிறன். போய் சாப்பிட்டு வருவம்.''

இருவரும் வாசனை கமழ்க்க, அழகான ஆடைகள் அணிந்து, காலைச் சாப்பாட்டிற்காகப் புறப்பட்டார்கள். ஓவியா வீட்டு முகப்பினில் போய் நின்று கொண்டாள். பிரதீபன் கராஜ்ஜிற்குள் இருந்து காரை வெளியே கொண்டு வந்தான். ஓவியா காருக்குள் ஏறும்போது, தூரத்தேயிருந்து அந்த இத்தாலிய முதியவர் கண்ணை இடுக்கிப் பார்த்தார். கார் அவரது வீட்டை அண்மித்தபோது, மறித்து நிற்பாட்டினார். ஒரு இளந்தாரி போலப் பாய்ந்து, முன்னேயிருந்த றோசா மரத்தில் ஒரு பூங்கொத்தைப் பிடுங்கினார். ஓவியா இருந்த பக்கமாக வந்தார். ஓவியா காரிலிருந்து இறங்கிக் கொண்டாள். அழகிய செந்நிறப் பூங்கொத்தை நீட்டினார்.

''நன்றி... என்ன இன்று உற்சாகமாக இருக்கின்றீர்கள்?''

''கொரோனாவாலை இவ்வளவு நாளும் மனைவியைப் பார்க்க முடியவில்லை. இப்ப கொஞ்சம் குறைஞ்சிருக்கிறதாலை பார்க்க விட்டிருக்கின்றார்கள்.'' அவர் முகத்தில் பரவசம்.

உரையாடல் முடித்துப் புறப்பட்டார்கள். பிரதீபன் ஓவியாவைப் பார்த்தான். கையில் வைத்திருந்த பூங்கொத்தை முகர்ந்து பார்த்தபடியே, ஓவியா புன்முறுவல் செய்தாள்.

பிரதீபனின் மனம் குறுகுறுத்தது. காலைச் சாப்பாட்டின்போது சிந்தனை வயப்பட்டிருந்தான். வீட்டிற்கு வந்ததும், ஓவியா முதியவர் கொடுத்த பூங்கொத்தை பவ்வியமாக அணைத்தபடி காரில் இருந்தும் இறங்கினாள். எண்பது வயது முதியவரே நாற்பதாக துள்ளிக் குதிக்கும்போது, பிரதீபன் எம்மாத்திரம்? வில்லில் இருந்து புறப்பட்ட அம்பானான். விர் எனக் கிழம்பியது கார்.

''எங்கே போகின்றீர்கள்?''

''சந்திவரை போய்விட்டு வருகின்றேன்.''

வரும்போது கையில் ஒரு சிறு பெட்டியுடன் வந்தான். உள்ளே மிகவும் விலையுயர்ந்த, அழகான பூங்கொத்து – ஓவியாவை ஆச்சரியப்படுத்தும் விதத்தில் ஒளிந்திருந்தது..

பெட்டியை உடைத்துப் பார்த்த ஓவியா, பூங்கொத்தைக் கண்டதும் ஆத்திரம் கொண்டாள். பெட்டியைத் தள்ளிவிட்டாள். பிரதீபன் அந்தப் பூங்கொத்தைக் குடுக்க எடுத்த எந்தவித முயற்சிகளும் பலிக்கவில்லை.

''இனிமேல் எனக்கு ஒரு போதும் பூ வேண்டாம். நானும் கேட்க மாட்டேன். எனக்கு அவர் தந்த பூவே போதும். முடிந்த முடிவாகச் சொன்னாள் ஓவியா.''

அவர் எவர் என்று குழம்பிப் போனான் பிரதீபன்.

## எங்கிருந்தோ வந்தாய்...

எங்கிருந்தோ வந்தாய்
உன் அன்பால் என்னை
வென்றாய்
அழகாய் என்னுள் நுழைந்தாய்
அடி நெஞ்சில் இசையானாய்
என் உயிரை உனதாக்கினாய்



உன் நேசத்தால் புது
வாசம் தந்தாய்
என் தேடலின் தேவை
நீயானாய்
புதுப் புதுக் கவியின்
பொருளானாய்

புதிதாய் என்னை
உணரச் செய்தாய்
பூரிப்பில் பொங்க வைத்தாய்
ஆசைகளை அதிகரித்தாய்
காதலில் கரைய விட்டாய்

தமிழ்வானவில் (யேர்மனி)

## நினைவெல்லாம் நீயே!



முதல் முறை உன்னைப் பார்க்கும்போது
அறிமுகமாவோம் என்று எண்ணவில்லை
கொண்டேன் உன்மேல்
கொள்ளை நேயம்
என் உதட்டில் புன்னகை
மலரச்செய்தது உன் குரல்
பார்த்தேன் உன் விழியில் என் உலகத்தை
மெய் சிலிர்த்தேன் நீ கட்டி
அணைக்கும்போது
நட்சத்திரக் கூட்டம் பிரகாசிக்க
உன் மார்பில் உறங்கினேன்
உன் தோழில் சாய்ந்து இதயம் கனிந்து
நம் எதிர்காலத்தைக் கனாக் கண்டேன்
நெஞ்சமெல்லாம் காதல்
நினைவெல்லாம் நீயே

தங்கத்தாமரை (யேர்மனி)






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# எனது உ ஆவது பக்கத்தை பார்க்க விரும்பினால் அதனையும் காட்டத் தயார்!

## ஜனாதிபதி கோதபாய

**பிரபாகரனை நாம் நாயை போல் நான்கு காலில் தவளவிட்டு முள்ளிவாய்க்காலில் இருந்து பிணமாக கொண்டு வந்தோம் ஜனாதிபதி கோதபாய தெரிவிப்பு.**

எனக்கு இரண்டு பக்கங்கள் உள்ளன,தேவை என்றால் அந்த இரண்டாவது பக்கத்தையும் நான் காட்டத் தயார் என ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அன்று 1977 இனக்கலவரத்தின்போது அன்று ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவாதனா போர் என்றால் போர்!அமைதி என்றால் அமைதி என்று போரை ஆரம்பித்து வைத்தார்.

இன்று ஆட்சியாளர்கள் மாறினாலும் அதே குரல் ஒலிக்கிறது. இந்நிலை மாறினால் அன்றி நமது நாடு அமைதிப்பூங்காவாக ஒரு நாளும் இருக்காது.

அரசாங்கத்தின் கிராமத்துடனான கலந்துரையாடல் திட்டத்தின் ஐந்தாவது கட்டம் அம்பாறை உஹன பகுதியில் அண்மையில் இடம் பெற்றது.இந்த நிகழ்வில், கலந்து கொண்டு உரையாற்றிய போதே, ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஸ இவாறு தெரிவித்ததுடன் மேலும் கூறுகையில்,

> **அன்று 1977 இனக்கலவரத்தின் போது அன்று ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவாதனா போர் என்றால் போர்!. அமைதி என்றால் அமைதி என்று போரை ஆரம்பித்து வைத்தார்.**



> **இன்று ஆட்சியாளர்கள் மாறினாலும் அதே குரல் ஒலிக்கிறது. இந்நிலை மாறினால் அன்றி நமது நாடு அமைதிப்பூங்காவாக ஒருநாளும் இருக்காது.**

கடந்த நல்லாட்சி காலத்தில் எதிர்கட்சியினர் மீது மேற்கொள்ளப் பட்ட அரசியல் பழிவாங்கல்களை நாம் கண்கூடாக பார்த்தோம்.திட்டமிட்ட குழுக்கள் மூலம் எதிர்க்கட்சிகளை பழி தீர்க்கும் விடயங்கள் அரங்கேற் றப்பட்டன. அரசியலை முன்னிறுத்தி நாம் செயற்பட தயாரில்லை.

யாரேனும் தவறு செய்திருந்தால் சட்டத்தின்படி நடவடிக்கையெடுக் கப்படும். ஆனால் தேவையில்லாது அழுத்தங்களை பிரயோகித்து அர சியலை அடிப்படையாக கொண்டு செயற்படுவதற்கு நான் தயாராக இல்லை.எதிர்க்கட்சியினர் இன் னும் இதனை புரிந்துகொள்ள வில்லை. அவர்களின் மோசமான அரசியலையே செய்கின்றனர். ஹரீன் பெர்னாண்டோ எம்.பி. கதைக்கும் விதத்தை பார்த்தால் அதனை புரிந்துகொள்ள முடிகின்றது.

நான் நந்தசேன கோதாபயதான். நந்தசேன கோதாபயவுக்கு இரண்டு பக்கங்கள் உள்ளன. எமக்கு தேவை ஜனாதிபதி கோதாபய அல்ல முன்னர் இருந்த பாது காப்பு செயலாளர் கோதா பய எனவும் கொஞ்சம் கடினமாக இருக்க வேண்டும் எனவும் எமது பௌத்த தேரர் கள் என்னிடம் சில வேளைகளில் கூறு கிறார்கள்.அதனையும் என்னால் செய்ய முடியும். அந்த முறையில் வந்தால் அதே முறையில் பதில் கொடுக்கவும் என்னால் முடியும்.

நான் பாதுகாப்பு செயலராக இருந்த போது பித்தளை சந்தியில் குண்டு வைத்து பிரபாகரன் வேலையை தொடங்கினார்.ஆனால் பிரபாகரனை நாம் நாயை போல் நான்கு காலில் தவளவிட்டு முள்ளி வாய்க்காலில் இருந்து பிணமாக கொண்டுவந் தோம்.தேவை என்றால் அந்த பக்கத் தையும் காட்ட தயார்.

எதற்கும் தயாராக இருக்கக் கூடிய கதாபாத்திரமே நான். எதிர்க்கட்சியி னருக்கு அரசியல் செய்ய முடியும். ஆனால் மக்கள் எதிர்பார்க்கும் நியாய மான அரசியலை செய்ய முடியும். ஆனால் மக்களுக்கு சேவையாற்று வற்கே எனக்கு தேவை என்றார். தமிழர் வாழ்வில் சில அறிவுப்புகள் பதிவுசெய்ப்படவேண்டும் என்பத னால் இச்செய்தி முக்கிய இடம் வகிக் கிறது.



நன்றி:தினக்குரல்



Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171 | Mob:No:0179 1484 892 | e.mail:siva@hotmail.de



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கான வாழ்க்கைத் துணைவர் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும்





**Dr.IN**

''உங்களுக்கான வாழ்க்கைத் துணைவர் எப்படியானவராக இருக்க வேண்டும்.'' இந்தக் கேள்வியை ஒரு பையனிடம் கேட்டால் விடை என்னவாக இருக்கும்.

### இன்றைய நிலை

பெரும்பாலனவர்களிலிருந்து பெருமூச்சுத்தான் விடையாகக் கிடைக்கும். குடைந்து குடைந்து கேட்டால் ''ஓலை பொருந்த வேணும், சீதனங்கள் சரிவர வேணும். பெட்டையும் லட்சணமாக இருக்க வேணும்'' என்ற விடை கிடைக்கலாம்.பெண் பிள்ளைகளிடம் கேட்டால், 'அப்பா அம்மா சொல்லுறதைத்தானே கேட்க வேண்டும்' என்பார்கள்.

மறுதலையாக பதின்மங்களிலேயே கண்டதும் காதல் எற்படுகிறது. பருவக் கிளர்ச்சிகள் சிந்தையில் முந்துகின்றன. பாலியல் கிளர்ச்சியை வாழ்க்கைத் துணை தேடுவதிலிருந்து பிரித்தறிந்து புரிந்து கொள்ளாத வயதில் 'கல்யாணம்தான் கட்டிக்கிட்டு ஓடிப் போலாமா?..' என்று சிந்திப்பது மறுபுறம் நடக்கின்றன.

டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

### ஓலைப் பொருத்தம் அறிவியலுக்கு ஒவ்வாதது

காதல் திருமணங்கள் அதிகமாகிவிட்ட காலகட்டம் இது. இருந்தபோதும், சாத்திரமும், சாதி, சமூக, பொருளாதார அம்சங்களும்தான் திருமணப் பொருத்தத்தின் மிகப் பெரிய அம்சமாக எமது சமூகத்திலிருப்பதை கவலையோடு ஏற்க வேண்டியிருக்கிறது. ஆனால் அவ்வாறு மந்தை ஆட்டு மனப்பான்மையில் தொடர்ந்து இருப்பது சமூக முன்னேற்றதிற்கோ தனிப்பட்ட ரீதியான நிறைவான வாழ்விற்கோ பொருத்தமானதாகத் தெரியவில்லை.

தேர்ந்தெடுப்பதில் உங்கள் பங்களிப்பு முக்கியமானதாக இருக்க வேண்டும். ஆனால் அது வெறுமனே உணர்வு பூர்வமானதாக இல்லாமல் அறிவு பூர்வமாகவும் இருக்க வேண்டும்.

### பேசுங்கள் பழகுங்கள் அவதானியுங்கள்

உங்களுக்கான துணைவரைத் தேடுவதின் முதல் அம்சம் அவருடன் பேசுவதுதான். இதுவே பரஸ்பர புரிதலுக்கான முதற்படி. பேசுவது மட்டுமின்றி சற்றுப் பழகினால் மேலும் நல்லது. தெளிவாகவும் திறந்த மனத்துடனும் பேசுங்கள்.

பேசுவதற்கு மேலாக அவனையோ அவளையோ நன்கு அவதானியுங்கள். மகிழச்சியானவனா, சிடுமூஞ்சியா, சந்தேகப் பேர்வழியா, சகசமாகப் பழகக் கூடியவரா, தெளிவாகத் தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்பவரா அல்லது அமுசடக்கியா போன்றவற்றை அவதானியுங்கள். அந்தக் குணாதசியங்கள் உங்களது இயல்புகளுடன் இசைந்து போகக் கூடியவையா என்பதை அனுமானித்துக் கொள்ளுங்கள்.



### கலந்து பேசுவாரா?

கலந்து பேசக் கூடியவராக இருப்பது அவசியம். உங்கள் இருவரிடையோ அல்லது குடும்பத்திற்குப் பொதுவானதாகவோ ஏதாவது பிரச்சனைகள் ஏற்பட்டால் அது பற்றிக் கலந்துரையாடி முடிவு எடுக்கக் கூடியவராக இருப்பது அவசியம். ஒற்றைப் போக்கில் தானே திடீர் முடிவுகள் எடுப்பராயின் பின்னர் பல பிரச்சனைகள் தோன்றலாம்.

அதேபோல மத நம்பிக்கைகள், மொழி, இனம், சாத்திர சம்பிரதாய பழக்க வழக்கங்களில் கடுமையான பற்றுக் கொண்டராக நீங்களோ அவரோ இருந்தால் அதில் நிச்சயம் ஒருமைப்பாடு வேண்டும். இல்லையேல் ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள் என்பது போல, மண முடித்த புதிதில் இல்லாவிட்டாலும் பிற்பாடு முரண்பாடுகள் தோன்றவே செய்யும்.

### கல்விப் பொருத்தம்

சோடிப் பொருத்தத்திற்கு கல்வித் தகமை மிக முக்கியமானது அல்ல. இருந்தபோதும் அது உங்களிடையே போட்டி பொறாமைகளுக்கு இடம் அளிப்பதாக இருக்கக் கூடாது. மிக உயர்ந்த கல்வித் தகமையுடையவர் மிகக் குறைவான கல்வி அறிவுள்ளவரை மணக்கும்போது தான் உயர்ந்தவர் மற்றவர் ஒன்றும் தெரியாத மக்கு என்ற மேலாண்மை உணர்வு ஏற்பட வாய்ப்புண்டு. இது நாளடைவில் பல மனக்கசப்புகளை வளர்க்கும்.

### கால அவகாசம்

புதிய ஒருவரைப் புரிந்து கொள்வதற்கு ஓரிரு சந்திப்புகள் போதாது. ஒரு சில மாதங்களாவது பழகிய பின்னர் தான் அவர் எப்படிப்பட்டவர் என்று கணிக்க முடியும். அதன் பின்னரே அந்த நட்பு திருமணம் மட்டும் போகலாமா எனத் தீர்மானிக்க முடியும்.

ஆனால் எமது சமூகச் சூழல் இன்னமும் அந்தளவு பரந்த மனப்பான்மையுடன் இல்லை என்பதையும் புரிந்து கொள்ளவே வேண்டும். ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்தாலே முடிச்சுப் போட்டுப் பேசுவார்கள். எவ்வாறாயினும் யாராவது உடனடியாக திருமணத்தை முடிக்க வேண்டும் என்று சொன்னால் சற்று அவதானமாக இருங்கள். கபடமான உள் நோக்கம் இருக்கக் கூடும். சற்றுக் கால அவகாசம் கேட்டு அவதானித்து முடிவிற்கு வருவதே நல்லது.

### மருத்துவ ரீதியாக

மருத்துவ ரீதியாக மிக நெருங்கிய சொந்தத்தில் மணம் முடிப்பது நல்லதல்ல. பரம்பரை நோய்கள் வருவதற்கான சாத்தியங்கள் அதிகமாகும். மச்சான் மச்சாள் திருமணங்கள் இங்கு பரவலாக இருந்தாலும் இப்பொழுது குறைந்து வருகின்றன. நெருங்கிய உறவினர் திருமணத்தால் பல விதமான பரம்பரை அலகு தொடர்பான நோய்கள் வரலாம். பிறவியிலேயே வரும் இருதய நோய்கள், அங்கக் குறைபாடுகள், மூளை மற்றும் நரம்பியல் நோய்களே அத்தகையவை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு பறவையைக் கொல்வது எப்படி?

**கவிதா லட்சுமி**
(நோர்வே)

முதலில் உங்களுக்குப் பிடித்தமான
பறவை ஒன்றைச் சந்திக்கும் வரை
காத்திருக்க வேண்டும்

அதனோடு மெல்ல மெல்ல
நட்பாகுதல் வேண்டும்

அது பறந்து திரியும் வெளிகளையும்
அதன் உயரங்களையும்
அதன் கனவுகளையும்
அறிந்து அதன் கனவுகளே உயர்ந்தவை
ஈடுஇணையற்றவை
என உறுதிப்படுத்திக்கொண்டே
இருக்க வேண்டும்

அதைத் தேடிச்சென்று
தாணியங்களை அப்பப்போ
அதன் வெளிகளில் வீசியபடியே
அதன் பறவைக் கூட்டத்தில் மெல்ல
நீங்களும் சேர்ந்துகொள்ள வேண்டும்

மிக நெருக்கமான பறவைகளை
இனம் கண்டு
அதன் பலம் பலவீனங்களால்
அவைகளை மெல்ல பிரித்தெடுப்பதில்தான்
உங்கள் ஆட்டம் தொடங்கப் போகிறது

இந்தப் புள்ளியில் இருந்து செயற்படுவது
மிக கவனத்திற்குரியது
பறவை கோபம் கொள்ளக்கூடும்
தனிமையடையக்கூடும்
அந்தக் கணங்களில் எல்லாம்
நீங்கள் அருகில் இருப்பதை

வழக்கமாக்கிவிட வேண்டும்
மிக அதிக அளவில் அக்கறை
கொள்ள வேண்டும்
கேட்காத உதவிகள்
தன்னார்வத் தொண்டுகளால்
நிரப்ப வேண்டும்
பின்னொரு நாளில் பட்டியலிடுவதை
அவை இலகுவாக்கும்

சமயம் வாய்க்கும் போதெல்லாம்
அதன் சிறகுகளை
அதன் வர்ணங்களை
அதன் வீரியத்தை
அவை எட்டப்போகும் உயரங்களை
பூசிய ரசத்தோடு
நீங்களே ஒரு கண்ணாடியாகி
அதன் விம்பத்தைத் தரிசிக்கத் தர வேண்டும்

சிறகின் நரைகளை
அவ்வப்போது பிடுக்கிப்போட வேண்டும்
சில சமயங்களில்
ஓரங்களை கத்தரித்தால்
மேலும் அவை வளருமென
நம்பவைக்க வேண்டும்

பறவையின் வெளிகளை
அதன் புதிய வானத்தை
நீங்கள்தான் விரித்து விட்டதாக
பாசாங்கு காட்ட வேண்டும்
பறவை நம்ப மறுத்தாலும்
கொண்ட நட்பால்
அவைகளை பொருட்படுத்தாமல்
அது பறந்து கொண்டிருக்கும்

அறியாத பொழுதுகளில்
சில முக்கியமான இறகுகளை
ரகசியத்தில் பிடுங்கிப்போட வேண்டும்
முடிந்தால் இவைகளை மற்றவர்கள்
பிடுங்கி விட்டதாகக் காட்ட வேண்டும்

பறவையின் அருகே பிற பறவைகள்
வராதபடிக்கு பார்த்துக்கொள்ளல் மிக அவசியம்

பல அசௌகரியங்களை ஏற்படுத்தி
அசௌகரியங்களுக்கெல்லாம்
பறவைதான்

காரணமென
அதையே சொல்லச்சொல்ல வேண்டும்
அதையும் சுற்றி இருப்பவர்களுக்கு
நிரூபித்துக் கொண்டே இருக்கவேண்டும்
பறவையால் நீங்களும்
இறக்கும் தருவாயில் இருப்பதாகச்
சொல்லிக்கொண்டே
மாந்திரீக கயிறெனவும்
நேர்ந்துவிட்ட கயிறெனவும்
பறவையின் சிறகுகளில்
கூலாங்கற்களைக் கட்டி
தொங்க விடவேண்டும்

அடுத்தடுத்து பெரும் பாறைகளையும்
அதனடியில் இரும்புக் கூண்டுகளையும்...

இரும்புக் கூண்டுதான் பறவைக்கு
பாதுகாப்பென பறவை சிந்திக்கத்
தொடங்கிவிடும் காலம்வரை
காத்திருங்கள் இது உங்களுக்கான
இரண்டாவது காத்திருப்பு

பாறைகளைத் தூக்கிக்கொண்டு
தன் வெளியை நோக்கிப் பறப்பதா
கூட்டினுள்ளே
பாதுகாத்துக் கொள்வதா என்ற
கேள்வியோடு அமர்ந்திருக்கும்
காலத்தில்

கூடுகளுக்குப் பழக்கப்பட்ட
குருவிகளை அனுப்பி
அக்கறையான புத்திமதிகள்
அறிவுறைகள், அனுபவங்கள்
கூண்ட்டுவழக்கம் அதன் சௌகரியம்
பற்றிச் சொல்ல அனுமதியளியுங்கள்

இப்போது நீங்கள்
மீண்டும் ஏதும் நடவாதது போலவே
நட்பையும் நலத்தையும்
வீசாரித்துக் கொண்டே
பறவை மெல்லக் கூடடைபட்டு
இறந்துகொண்டே போவதை
அன்போடு நிதானமாகப்
பார்த்துக் கொண்டிருங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனையை அடக்கிய அரியாத்தை

## அட நம் தாயகத்தில் நடந்த கதை!



ஓவியம்: மருது

பொலிகையூர் ரேகா
M.com.,M.Phil.,MBA.,M.Phil
(திருச்சி– தமிழ்நாடு)

பழந்தமிழர் இலக்கியங்களான சங்க நூல்களில் வீரத் தமிழச்சியர் குறித்த பல செய்திகள் இடம்பெறுகின்றன.கொல்ல வந்த புலியை முறத்தாலேயே அடித்து விரட்டிய வீரத் தமிழ்ப்பெண்ணைப் பற்றி அதிகம் அறிந்திருக்கின்றோம். ஈழத்தின் நாட்டார் பாடல்களில் ஒப்பாரி வடிவத்தில் இடம்பெறும் நம் வீரமங்கை அரியாத்தையின் வீரச் செயல் குறித்த உண்மைச் செய்தியை நாம் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

முல்லைத் தீவின் குமுழமுனைப் பகுதியில் சின்னவன்னியன் எனப் படும் சிற்றரசனது ஆட்சிக் காலத் தில் அரியாத்தை என்ற வீராங் கனை வாழ்ந்து வந்தார்.அவர் யானை பிடிக்கும் தொழிலினைச் செய்து வருகின்ற வேலப் பணிக்க னின் மனைவியாவார்.

அந்தக் காலப் பகுதியில் கண்டல் காட்டிலே மதங்கொண்ட கொம்பன் யானையொன்று அழிவு செய்தது.இதற்குத் தீர்வு காணச் சின்னவன்னியன் ஏழு ஊர்ப் பணிக்கர்களை அழைத்து ஆலோசனை செய்தான். அந்த ஆலோசனைச் சபையில் ஒருவன் எழுந்து ‘‘வேலப்பணிக்கனே இந்த யானையைப் பிடித்துக் கட்டக் கூடியவன்’’ எனக் கூறினான். அதனால் பொறாமை கொண்ட இன்னொரு பணிக்கன் வேலப்பணிக்கனால் முடியாது;அவன் மனைவி அரியாத்தையால்தான் முடியும்’’ எனக் கூறிக் கேலி செய்தான்.இதனையெண்ணி வேலப்பணிக்கன் கவலையுற்றான்.

வீடு சென்ற வேலப்பணிக்கன் கவலையுடன் இருப்பதைக் கண்ட அரியாத்தை அவனிடம் அரச சபையில் நடைபெற்ற விவாதத்தை அறிந்து அவனுக்கு ஆறுதல் கூறித் தானே அந்த யானையைப் பிடிக்கச் சென்றார்.

கண்டல் என்னும் இடத்தை அடைந்து அங்கே யானையைப் பிடித்து அடக்கி அதன்மேல் ஏறி வந்து அதைப் பண்டாரவன்னியன் வளவுப் பகுதியில் இருந்த பெரிய புளிய மரத்தில் கட்டினார்.

அரியாத்தைக்கு அரச சபையில் சிறப்பான வரவேற்பு நடைபெற்றது. சின்னவன்னியன் அவரின் வீரத்தைப் புகழ்ந்து பாராட்டிப் பரிசும் விருந்தும் அளித்துக் கௌரவித்தான். வீடு திரும்பும் போது அவள் கால்கள் சோர்வடைந்து வீழ்ந்து இறந்தாள்.

இறந்ததற்கான சரியான காரணம் கூறப்படாவிட்டாலும் ஒரு பெண் தம்மை வெல்வதா என்ற அவமான உணர்வில்; விருந்தின் முடிவில் யாரோ ஒரு பணிக்கன் வெற்றிலையில் நஞ்சைத் தடவிக் கொடுக்கவே அதையறியாமல் உண்டதால் அரியாத்தை இறந்து விட்டார் என்று கூறப்படுகிறது.

அவிழ்த்துவிட ஆளின்றி புளிய மரத்தில் கட்டப்பட்ட யானையும் இறந்துவிட்டது.அவரது கணவனான வேலப்பணிக்கனும் மனைவியின் பிரிவுத் துயர் தாங்காது அவள் சிதையிலேயே தீக்குளித்து இறந்தான்.

இவர் யானையைக் கட்டியதாகக் கூறப்படும் அந்தப் புளிய மரத்தையும், யானை மரத்தைச் சுற்றிய பெரிய காலடித் தடங்களையும் முன்னோர்கள் கண்களால் பார்த்ததாகக் கூறப்படுகின்றது. இவை தற்போது காலமாற்றத்தினால் அழிவுற்றுள்ளன.

அரியாத்தை இங்குள்ள கொட்டுக் கிணற்றுப் பிள்ளையாரை வழிபட்டே தனது கருமங்களை ஆற்றினார் என்றும் கூறப்படுகிறது.

குமுழமுனைக் கிராமத்தில் பெரிய வெளியில் அமைந்துள்ள கண்டல் எனுமிடத்தல் அரியாத்தை அவர்கள் யானையைக் கட்டினார். இதனால் அந்த இடம் ‘‘கொம்பன் படுத்த கண்டல்’’ என்று அழைக்கப்படுகிறது. இப்பிரதேசம் தற்பொது ‘‘கரிக்கட்டுமுலை’’ என்ற பெயரில் அழைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.(கரி(யானை)யைக் கட்டிய முலை)

அரியாத்தையின் வம்சாவழியினர் இன்றும் செம்மலை என்னும் கிராமத்தில் உள்ளனர் என்றும் அவர்களிடத்தே அரியாத்தையின் அடையாளச் சின்னங்களான கந்தல் நிலையிலுள்ள பட்டுச் சேலையொன்றும், ‘‘மைனாப் பூ’’ என்று சொல்லப்படுகின்ற எறி ஈட்டி ஒன்றும், மூலிகை வளையங்களோடு கூடிய அரைப் பட்டியொன்றும், கொம்போடு கூடிய வார்க்கயிறு ஒன்றும் அவர் கொண்டு சென்ற மந்திரக் கோலொன்றும் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

வேலப்பணிக்கனும்,அரியாத்தையும் குடியிருந்த இடம் அதிரியங்கோடு என்று அழைக்கப்படுகிறது. இவ்விடம் குமுழமுனை மற்றும் அளம்பில் செம்மலை ஆகிய கிராமங்களுக்கிடையில் அமைந்துள்ளது என்று கூறப்படுகிறது.

முறத்தால் விரட்டியடித்தார் அந்த வீரத்தமிழ்ப் பெண் என்றால் யானையையும் அடக்கி அதன் மேல் அமர்ந்து வந்தவர் இந்த ஈழத் தமிழ் மகள். வேழம்படுத்த வீராங்கனையைப் போற்றுவோம்!









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எனது நாடக அனுபவங்கள் 04



ஆனந்தராணி பாலேந்திரா (UK)

## "நட்சத்திரவாசி" 1977- 1978

நான் நடித்த "நட்சத்திர வாசி" நாடக காலகட்டத்தில் எனது வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம் நடந்தது. 21 வயதுவரை கொழும்பில் வசித்துவந்த என்னை இந்த சம்பவம் நிரந்தரமாக யாழ்ப்பாணத்திற்கு குடியேற வைத்தது.

க.பாலேந்திரா நெறிப்படுத்தி நான் நடித்த "மழை" நாடகம் 1976 இல் முதல் மேடையேற்றம் கண்டு பின்னர் 1977இல் இலங்கையில் வேறு இடங்களில் மேடையேறிக் கொண்டிருந்த வேளையில், இனக்கலவரம் வெடித்தது. அதற்கு முன்னர் கொழும்பு தெகிவளையில் வசித்து வந்த நான் இனக்கலவரம் ஆரம்பமாவதற்கு சில மாதங்களுக்கு முன்னர்தான் கொழும்பு மவுண்ட்லவனியாவில் எனது பெற்றோர் சகோதரர்களுடன் வேறு வீட்டில் வசிக்க ஆரம்பித்திருந்தேன். நாம் இருந்த தெருவில் ஓரிரு தமிழ் குடும்பங்களே வசித்து வந்தன.

காடையர்கள் தமிழர்களைத் தாக்குகிறார்கள் என்ற செய்தி எம்மை வந்தடைந்தது. எனது அப்பாவும் அம்மாவும் ஏற்கனவே 1958 இல் நடந்த இனக்கலவரத்தின் போது தாம் பொல்காவலவில் இருந்து எப்படித் தப்பினார்கள் என்ற கதையை எமக்குச் சொல்லியிருந்தார்கள். அவர்களுக்கு இதன் தாற்பரியம் நன்கு புரிந்திருந்தது. இப்போது நாங்கள் ஐந்து பிள்ளைகளும் கூட.

நாம் வசித்த வீட்டின் பின்புறமாக அனெக்ஸில் ஒரு பறங்கியர் [Burghers] குடும்பத்தினர் வசித்து வந்தார்கள். இருவரது வீட்டிற்கும் இடையில் ஒரு கதவு இருந்தது. அவரவர் பகுதிகளில் பூட்டி வைத்திருந்தோம். அவ்வப்போது கண்டால் "ஹலோ" சொல்லும் அளவில்தான் எமது உறவு இருந்தது. பதட்டம் நிலவிய வேளையில் அவர்கள் எம்மிடம் வந்து பொதுக் கதவின் பூட்டை நாம் திறந்து வைத்துள்ளோம். உங்களுக்கு ஆபத்தென்று கருதினால் எமது பகுதிக்கு வரலாம் என்று சொன்னார்கள். ஒரு இரவு அங்கே தங்கினோம்.

காடையர்களுக்கு எமது வீடு தெரிந்துவிட்டது. அடுத்த நாள் நிலைமை மோசமாகியதை அடுத்து எமது பக்கத்து வீட்டில் குடியிருந்த சிங்களக் குடும்பத்தினர் தமது வீட்டில் எம்மைத் தங்க வைத்தார்கள். மறுநாள் எமது வீதியில் கத்தி, பொல்லுகளுடன் தமிழர்களைத் தேடித்திரியும் காடையர்களைக் கண்டவுடன் வீட்டுச் சொந்தக்காரர் தனது மாமனாரின் வீடு பாதுகாப்பானது என்று கூறி அங்கே அழைத்துச் சென்றார். மாமனார் அந்த இடத்தின் கவுன்சிலராக இருந்தவரென்பதும் அவரது காரில் எம்மை அழைத்துச் சென்றதும் எனக்கு நல்ல ஞாபகம்.

அவரது வீட்டில் எமக்கு அடைக்கலம் கொடுத்தது தெரியவர, அது அவருக்கே ஆபத்தாக மாறும் என்று தெரிந்தபோது எனது அப்பா வெள்ளவத்தை பிள்ளையார் கோயில், கதிரேசன் மண்டப வளாகத்தில் தமிழர்களுக்கான முகாம்கள் திறந்திருப்பதை அறிந்து அங்கே எம்மைக் கொண்டுபோய் விடுமாறு கேட்டார். இரண்டு கார்களில் அவர்கள் எம்மைக் கூட்டிச் சென்றார்கள். வழியில் தெகிவளை சந்தியில் தமிழர்களின் கடைகள் எரிவதைப் பார்த்தோம். உயிராபத்து ஏற்படும் வேளையில் நடந்தவை, அது எவ்வளவு காலம் சென்றாலும் மனதில் பதிந்துவிடுகிறது. மனிதநேயம் என்பது சாதி மத இனத்திற்கு அப்பாற்பட்டது என்பதும் புரிந்தது.

முகாமுக்குப் போனபோது அங்கே ஏற்கனவே பல பகுதிகளிலிருந்தும் தமிழ் மக்கள் குடும்பம் குடும்பமாக வந்திருந்தார்கள். அதிலே காயப்பட்டவர்கள், மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் என பலவிதமானோர் இருந்தனர். சிலரின் கதைகளைக் கேட்டபோது எமது துன்பம் கடுகளவானது. எல்லோருக்குமான உணவு விநியோகம், சுகாதார சேவைகள் போன்றவற்றை ஒழுங்குமுறையில் செய்வதற்கு நானும் என்னைப்போன்ற இளையவர்கள் சிலரும் தொண்டர்களாக பணியாற்ற ஆரம்பித்தோம். அப்போதுதான் இன்னுமொரு இளைஞர் குழுவினரும் அங்கே தொண்டாற்றிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். அக்குழுவில் பாலேந்திராவும் என்னோடு 'பிச்சை வேண்டாம்' நாடகத்தில் நடித்த சிலரும் இருந்தனர்.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த நேரம் அது. என்னோடு ஒன்றாகப் படித்த லோகா சிவஸ்கந்தராஜா [சிவசிங்கம்] இந்த முகாமிற்கு எதிரில் இருந்த பம்பலப்பிட்டி கடயவள இல் வசித்துவந்தார். கொழும்பில் அப்போது இந்த கடயவள, ரொறிங்டன் அன்டசன் கடயவள என விரல் விட்டு எண்ணக்கூடிய தொடர்மாடி வீட்டுக் கட்டடங்கள்தான் இருந்தன. இப்போது நிலைமை வேறு. தனி வீடுகள் எங்கே என்று கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. நாம் தங்கியிருந்த முகாமில் சுகாதார வசதிகள் மிக மோசமாக இருந்தன. ஆண்கள் சமாளித்தார்கள். பெண்கள் நாம் சிரமப்பட்டோம். குறிப்பாக இளம் பெண்கள். அவ்வேளையில் ஊரடங்கு சட்டத்தை தளர்த்திய நேரங்களில் லோகாவின் வீட்டில் குளியலறை போன்றவற்றை எனக்கு மட்டுமல்ல, சிரமப்படும் பெண்களுக்கும் பாவிக்க உதவினார்கள்.

எனது அப்பா எங்களை எப்படியாவது யாழ்ப்பாணத்திற்குக் கூட்டிப்போக வேண்டுமென்று முயற்சி செய்து கொண்டிருந்தார். கொழும்பு துறைமுகத்தில் இருந்து கப்பல் புறப்படும் என்றார்கள். ஆனால் அது எப்போது என்று யாருக்கும் நிச்சயமாகச் சொல்லத் தெரியவில்லை. இதற்கிடையில் இலங்கை விமான சேவையில் பணியாற்றிக் கொண்டிருந்த எங்கள் உறவினரான சுந்தரகுமார் [இவர் பின்னர் எனது அக்காவைத் திருமணம் செய்து எனது மைத்துனர் ஆனார்] கொழும்பிலிருந்து பலாலிக்கு விமான சேவை இடம் பெறவுள்ளது என அறிந்து அதில் நாம் பயணிப்பதற்கு ரிக்கற்றுகளை பெற்றுத் தந்தார்.

இரண்டு பஸ்களில் ஆமிக்காரரின் பாதுகாப்போடு இரத்மலானை விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டோம். விமான நிலையத்திலும் பல மணித்தியாலங்கள் நாம் எல்லோரும் காத்திருக்க வேண்டியிருந்தது. எந்த நேரமும் என்னவும் நடக்கலாம் என்ற ஒரு அச்சம் எல்லோரையும் ஆட்கொண்டிருந்தது. பல மணி நேரத்திற்குப் பின்னர் நாம் எல்லோரும் விமானத்தில் ஏறினோம். எனது முதல் விமானப் பயணம் அது. எல்லோரும் அது Jumpo Jet என்று பேசிக்கொண்டார்கள்.

மிகுதி அடுத்த இதழில்...






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







# யாழ்ப்பாணத்தில் அலங்கார வளைவு!





# தமிழர்களின் இருப்பை நிலைநிறுத்த இவையும் அவசியமே!

யாழ்ப்பாணம் கண்டி பிரதான வீதியான ஏ–9 வீதிக்கு அண்மையில், செம்மணிப் பகுதியில் இந்த அலங்கார வளைவு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் முயற்சியிலும், நிதி ஒதுக்கீட்டிலும் இந்த அலங்கார வளைவு சம்பிரதாய, பண்பாட்டுச் சின்னங்களைத் தாங்கியவாறு அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இந்த அலங்கார வளைவின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த நிலையில், விசேட யாக பூசைகள் இடம்பெற்றன.

இந்நிலையில், தைத்திருநாளான கடந்த தைப்பொங்கல் 14.01.2021 தினத்தில் நல்லூர் ஆலயத்திலிருந்து திறப்பு விழாவுக்குத் தேவையான பொருட்கள்



பாரம்பரிய முறைப்படி மாட்டு வண்டிலில் செம்மணி அலங்கார வளைவு அமைந்துள்ள இடத்திற்கு எடுத்துவரப்பட்டன.

அத்துடன், தவில், நாதஸ்வரம் இசைக்க, சிவாச்சாரியர்கள் வேத மந்திரங்களைப் பாராயணம் செய்ய, இறையாசியுடன் அலங்கார வளைவுத் திறப்பு விழா இடம்பெற்றது.

நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு திருமுருகன், ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோருடன்லு சிவாச்சாரியர்கள், சைவசமயப் பெரியவர்கள், முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன், உறுப்பினர்கள், அதிகாரிகள், நல்லூர் கந்தசுவாமி ஆலய பரிபாலகர்கள் எனப்



பலரும் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அரசு பல வழிகளில் தமிழர்பகுதிகளை ஆக்கிரமிக்கும் வேளையில் இதுபோன்ற சில நிகழ்வுகள் அவசியமாகிறது. நாம் நமது காலத்தில் பழையானவற்றைப் பேணவும் புதியனவற்றை நிறுவவும் முயல்வோம்.






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# சுவாமி விவேகானந்த சரிதம்

சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்த தினத்தை ஒட்டி மிக சிறப்பானதொரு நிகழ்வினை வழங்க வேண்டும் என்று இலங்கை இராமகிருஷ்ண மடத்தின் பிராதன ஸ்வாமிஜி எண்ணம் கொண்டார். இதற்காக விவேகானந்தர் வாழ்க்கை வரலாற்றினை நாடக வடிவில் அமைக்க வேண்டும் என்றும் விரும்பினார். அவ்வெண்ணத்தினை பூர்த்தி செய்வதற்காக சபையில் எனது பெயர் பரிந்துரைக்கப்பட்டது. ஸ்வாமிஜியை சந்திக்க எனக்கு அழைப்பும் விடுவிக்கப்பட்டது.

இலங்கைக்கு வந்து சிறு காலமேயான சுவாமிஜியிடம் எனக்கும் அறிமுகம் அதுவரை நிகழவில்லை. அந்த நாள் என் வாழ்வில் மறந்திட முடியா மலர்ச்சியை தரும் என அன்று நான் அறிந்திருக்கவில்லை.

வாசலில் நின்று மிக்க மரியாதையுடன் என் பெயரை சொன்னேன் .ஸ்வாமிஜி என்னைக் கண்டும் சிறிதேனும் என்னைப் பொருட்படுத்தவில்லை.

அதன் பின் என்னை சிபாரிசு செய்த குழுவில் இருந்து அதிபர் வந்தார். சுவாமிஜிக்கு என்னை அறிமுகப் படுத்தினார். அக்கணத்தில் இருந்து குறைந்தது 30 நிமிடங்களாவது வைத்த கண் வாங்காமல் ஆச்சர்யத்தின் உச்சத்தில் என்னை பார்த்திருந்தார்.

உடனடியாக நூலகத்தில் இருந்து விவேகானந்தர் குறித்தான பல நூல்கள் வரவழைக்கப்பட்டு என்னிடம் கையளித்தார். அவரது அளவிலா வியப்பிற்கு என்ன காரணம் என அன்று நான் அறிந்திருக்கவும் இல்லை.

விவேகானந்த சரிதத்தை 20 நிமிடங்களுக்குள் என்னிடம் சுருங்கச் சொன்னார். அத்தனையையும் மன நூலில் குறித்துக் கொண்டேன்.

இதுவே சுவாமி விவேகானந்த சத் சரிதம் உருவான முதல் சம்பவம். சிவன், கிருஷ்ணன், அம்பாள் என புராண கதைகளை தழுவிய நாட்டிய நாடங்களை சிறு சிறு முயற்சிகளாக செய்து கொண்டிருந்த வேளை, 90 நிமிட முழு நாட்டிய நாடகத்தினை மேடையேற்றுவது என்பது எனது முதல் அனுபவம்.



தரப்பட்ட நூல்களின் தாய்மை தெரிந்து ஆழ்ந்த பொருள் அறிந்து, அதன் உண்மை விளக்கம் உணர்ந்து இந்நாட்டிய நாடகத்திற்கான பாடல்களையும், இயலாக்கத்தினையும் நானே வழங்கலாம் என்று ஆவல் கொண்டேன். 7 நாட்களுக்குள் நாட்டிய நாடகத்திற்கான இயலாக்கம் அமையப்பெற்றது.

இதற்கான இசையை வழங்க இந்தியாவில் இருந்து திரு உன்னிகிருஷ்ணன் நந்தகுமார் , மாயவரம் . தி. விஸ்வநாதன் , திரு ராமநாதன் கலையரசன் ஆகியோர் இலங்கை வந்து இசைப்பணி ஆற்றினர்.

சத்திய சீலமும், சங்கீத ஞானமும் , நித்திய வலிமையையும், நீங்காத தியானமும் , தத்துவக் கேள்வியும் என வளர்ந்திட்ட நரேந்திரனின் இளமை காலம் முதல் சமாதி எய்திய நிலை வரை காட்சி அமைப்பு வழங்கப்பட்டு இருந்தது. எல்லையயற்ற பரமானந்தத்தை உடல் தங்கிடும் சக்தியை உடல் இழப்பதை அறிந்து , மனித உடல் மறைந்தது. ஆனால் ஐயனின் பொன் மொழி அகலாது அருள்கிறது.

சிகாகோ மாநகரில் ‘‘அமெரிக்க வாழ் சகோதர சகோதரிகளே என்று தன் உரையை ஆரம்பித்ததும், வான் பிழக்க வாழ்த்தொலியில் , நான்காயிரம் நடு நிலையில் , ஊன் மறந்து உணர்வு எழுந்து ஆன்றோர் ஆர்ப்பரித்த கரவொலியை , ஆழ் கடல் அமைதி போல் ஏற்று கொண்ட மகான் .

வெறும் வயிற்றில் ஒட்டாது மெஞ்ஞானம் , பசியறுத்து பாரத பிணியறுப்போம் என தனவந்தர்கள் பார்வையை ஏழைகள் மீது சாய்த்து லோக வேதாந்த தேச பக்தர் சுவாமி விவேகானந்தர் எனப் பெயர் பெற்றவர்.

சொந்த உறவுக்கும் பந்த பாசத்திற்கும் முந்தும் பதவிக்கும் சொத்து பணத்திற்கும் சிந்தை குலைந்தாடி விந்தை புரிந்தாடும் மானிடரை உய்விக்க வந்த பரம ஹம்சர் கண்டெடுத்த ஞான சிற்பி.

உருவ வழிபாட்டின் உன்னதத்தை விளக்கியவர்.

பதினெண் ஆற்றல் நிறை ஞான பிரகாசன். பாரா முகத்தையும் தாங்கும் ஆன்மீக சாதகன்

காற்றிலா வெளியிடை தீப சுடர் போல் மாற்றிலா மனத்திடை மருந்தவர். ஓராயிரம் இதழிடை அம்புஜம் போல் ஒப்பிலா ஒளியிடை ஆதவன். ஆத்ம ஜோதியே நிஜம் என்று அறிந்தவர்.

குரு ராமகிருஷ்ணா பரமஹம்சரிடத்தே நிர்விகல்ப அனுபூதி எய்தியவர். நாடு தோறும் மனித சக்தியின் தெய்வீக சுடர் ஏற்றிட பணி புரிந்தவர்.தேச சஞ்சாரி, ஆத்ம சாதகர் !

இந்த நாட்டிய படைப்பின் மூலம் கிடைக்கப்பெற்ற திருப்தி எல்லை அற்றதாய் அமைந்தது. அதற்கு மூல காரணம்

1. பங்குபற்றிய 30 மாணவர்களிடையே பாரியளவிலான மாற்றத்தை உணர்தோம். நெறியாள்கை , பயிற்சி காலங்களில் விவேகானந்தர் அருளிய மொழியை மாணவர்களிடையே வித்திடும் பொழுதும், ஒத்திகை காலத்தை 21 நாட்கள் என ஆக்கி தினமும் மாணவர்கள் தியானம் செய்யும் வழக்கத்தை 21 நாட்களும் அமைத்ததாலும் இந்த மாற்றம் உருவாகி இருக்கலாம்.

28 ஆம் பக்கம் பார்க்க...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை:

# லால்பகதூர் முரளி

முளைத்து மூன்று இலை விடவில்லை. திருட்டு முழி வேறை. அதிபர் அறைக்கு முன்னால் நிற்கும் முரளியைப் பாரர்த்து வரும், போகும் வாத்திமார் எல்லம் பொரிஞ்சு தள்ளிக்கொண்டு போகினம்.

படிக்கவந்தால் காவாலிப் பசங்கள் உருப்படியாக பெட்டையளையும் படிக்கவிடமாட்டேன் என்கிறாங்கள். அக்காதங்கச்சியுடன் பிறக்கவில்லையா? இது ஒரு ரீச்சரம்மாவின் இடிமுழக்கம்.

என்னதான் முரளி செய்துபோட்டான். பள்ளிக்கூடம் முழுக்க திட்டித் தீர்க்குது. அது சரி இந்த விசையம் எப்படி எல்லாருக்கும் தெரிந்தது. அது போகட்டும் எப்படி அதனை சட்டென்று கண்டுபிடித்தார்கள். அப்படி என்றால் கண்டுபிடித்தவர்கள் கூட்டத்திலும் ஒரு கறுப்பாடு இருக்கத்தானே வேண்டும்.

இது வாத்தியாற்ரை வேலை மட்டும் இல்லை, கூடப்பிறந்த அண்ணன் சேரனும் சேர்ந்துதான் போட்டுக்குடுத்திருக்கவேண்டும்.

இல்லையேல் வைச்ச இடத்தில் எடுப்பது போல் அப்படி அந்த நேரத்தில் எவருக்கும் அந்த எண்ணம் வந்திராது. கூடப்பிறந்த அண்ணன் என்று சொன்னேன். அவனும் முரளியும் ஒரே ஊர் மட்டுமல்ல நல்ல நண்பர்களும்தான். ஆனால் முரளி செய்தது தப்பு என்றுதான் அப்ப எல்லாரும் சொல்லுகினம்.

பாடசாலைக்கு அதிகாலையில் வரும் மாணவர்களும் இருக்கினம் மணி அடிக்கைக்கை உள்ளுக்கு வேர்த்து விறுவிறுக்க வந்த அமரும் மாணவர்களும் இருக்கினம். முரளிக்கு அப்படி ஒருநாளும் வேர்த்தது கிடையாது. அவன் தாய்தகப்பன் மலைநாட்டில் படிப்பிக்கினம் பெரியதகப்பனோடுதான் அவன் இருந்து படிக்கிறான். சாப்பாடு மத்தியானம் பாடசாலை விடுதி கிடைக்கும். எல்லோரும் தாய் செய்துகொடுத்த தனித்துவமான உணவை பாசலாக கட்டி வந்து மத்தியானம் சாப்பிடுவார்கள். இவன் மட்டும் விடுதியில் ஒரே உணவு 4 வாரமும் சலிப்போடு சாப்பிடுவான்.

15 வயது அவனுக்கு தாயின் அரவணைப்பு இல்லை. எந்த உறவாக இருந்தாலும் தாய் போல் வருமா? 5 பிள்ளைகள் இருந்தாலும் 5 பேருக்கும் தாய் ஒரேமாதிரியா உணவு பாசல் கட்டிக்கொடுப்பாள். இடியப்பம் என்றாலும் ஒருபிள்ளைக்கு சம்பலும் இடியப்பமும், ஒரு பிள்ளைக்கு தேங்காய்ப்பூவும் சீனியும் போட்டு கலந்து இடியப்பம். மற்றப்பிள்ளைக்கு சொதி வேண்டும். கோர்லிக் போத்தலில் சொதிவிட்டு கொடுப்பாள். மற்றப்பிள்ளை கொஞ்சம் அடம்பிடித்தால் முட்டைபொரித்து இடியப்பம் கொடுப்பாள். இப்படித்தான் முரளியோடு படிப்பவர்கள் மதியம் சாப்பிடும் போது விரிக்கும் உணவுப்பாசல் எல்லம் பாசக்கதைசொல்லும்.







முரளியின் நண்பன் சேரன் இருவரும் ஒரே வகுப்பு ஒன்றாக வாங்கில் இருபுறமும் காலைப் விரித்து போட்டுக்கொண்டு நடுவில் பாசலை விரித்து வைத்து உண்பார்கள். முரளிக்கு விடுதிச் சப்பாடு. சேரன் வீட்டுச்சாப்பாடு. சேரவீட்டில் 4 பெண் சகோதரங்கள். சேரன் மட்டும்தான் ஒரு ஆண்பிள்ளை. அவனுக்கு எல்லோரும் செல்லம். சேரனுக்கு எப்பவும் ஸ்பெசல் உணவுதான்.

வழமைபோல் அன்றும் இருவரும் உணவு பொட்டலைத்தை விரித்து சாப்பிட்டார்கள். அங்கு உணவு கட்டுவது வாழையிலையில் என்றாலும் அதனைச் சுற்றி பாசல் கட்டுவது தினசரிப்பேப்பரில்தான். இருவரும் பாசலை விரிக்கிறார்கள் சோறும் முட்டைப்பொரியலும் உருளைக்கழங்கு கறியும். என்னடா இருவருக்கும் இன்று ஒரேமாதிரி சாப்பாடு என்று நினைத்துக்கொண்டு சாப்பிட்டு முடித்தான் சேரன். சேரன் சாப்பிட்டு முடிப்பதற்குள் முரளி சாப்பிட்டு விட்டு மைச்சான் இந்த பாசல் சுத்தின பேப்பரையும் எறியடா.. என்று விட்டு கைகழுவ ஏதோ காதலியைக் காண ஓடுவது போல் ஓடினான்.

சேரன் அவனது பேப்பரையும் எறிவதற்கா எடுத்தான். ஒரு கணம் திகைத்துப்போனான். சேரனின் பேப்பரில் பாதியில் பாதப்பிரதமர் லால்பகதூர் இருந்தது... மறுபகுதி முரளியின் பாசல் பேப்பரில் சாஸ்த்திரி காலமானார் இருந்து. இப்போது அவன் மனம் முன்னோட்டம் செய்தது.

ஒரே சாப்பாடு சோறு உருளைக்கிழங்கு சரி.. அது எப்படி சைவ உணவு கொடுக்கும் விடுதியில் முடைப்பெரியல் முரளிக்கு வந்தது.

கண்கள் அகன்றது. மீண்டும் கசக்கிய அந்த சாப்பட்டு கட்டிய பேப்பரை ஆய்வு செய்தது. ஆம் ஒரு பேப்பர் பாதியாக கிழத்து கட்டப்பட்ட சாப்பாட்டு பாசல்கள்தான் அவை. அப்படி என்றால் இந்த சாப்பாடு எங்கள் வீட்டில் இருந்து வந்திருக்க வேண்டும். எனக்கு சாப்பாடு கட்டித் தந்தவள் கடைக்குட்டி வசந்தி.

இரவு முழுவதும் ஒன்றும் பேசவில்லை. மறுநாள் காலை எழுந்ததும் வந்தியின் கொப்பிகள் புத்தகம் எல்லாம் தேடினான் ஒன்றும் தென்படவில்லை.

பாடசாலைக்கு அன்று நேரத்தோடு சென்றுவிட்டான் சேரன். வசந்தியும் எப்பவுமே 2வது றிப்பில்தான் காறில் பாடசாலை செல்வாள். சேரன் உளவுப்படையில் சேரந்தவன் போல் வசந்தியின் வகுப்பறையை நோட்டமிட்டபடி இருந்தான். வசந்தியின் வகுப்பறையில் இருந்து முரளிவெளியே வருவதை கண்ட சேரன். மெதுவாக சென்று பாரத்தான். எவரும் இல்லை. வசந்தி இருக்கும் மேசையின் புத்தகம் வைக்கும் தட்டை எட்டிப் பார்த்தான்.

ஒரு ஆங்கிலக் கொப்பி பிறவன் பேப்பரால் அழகாக உறைபோட்டிருந்தது. அதனுள் அழகிய தமிழ் எழுத்துக்கள் முத்து முத்தாகத் உறைக்குள்ளால் வெளியே தெரிந்தது. கொப்பி உறையைத் திறந்து பார்த்தான் அசந்துபோனான். வசந்திக்கு முரளி எழுதிய கடிதம். அந்தக்கடிதம் வாசித்தபோது அது முதல் கடிதம் அல்ல பதில் கடிதம் என்பதும் பரிந்து. அவன் வாசித்துக்கொண்டு இருக்கும்போதே பல மாணவர்கள் சூழ்ந்கொண்டார்கள்.

31 ஆம் பக்கம் பார்க்க...









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நடுப்பக்கம்

சேவியர்
(தமிழ்நாடு)

# Covid19 vs Teens
# கோவிட் கால காதல் கடிதம்

**என் பிரிய காதலியே!**

உனைச் சந்தித்து வெகு காலமாகிறது. காலம் நம்மை குவாரண்டைன் சுவர்களுக்குள் அடைத்து நிறுத்தியது. டிஜிடல் திரைகளின் வெளிச்சப் புள்ளிகள் காட்டும் உனது பிம்பத்தை நீ என நான் ஒத்துக் கொள்வதில்லை. உன் வாசனை வீசும் காற்றை நுகர்ந்து, உன் அருகாமையில் வெட்கப்படும் பூக்களின் தோல்வியை ரசித்து, உன் விழிகளின் விபரீத அசைவுகளை வியந்து ரசிப்பதைத் தான் நான் ‘சந்திப்பு’ என்கிறேன். அவற்றை இந்த வெளிச்சத் திரைகளின் நெட்வர்க் நாணம் தருவதேயில்லை.

கோவிட்டின் நாட்டியக் கால்களிடையே நசுங்கிப் போன காதலர்களின் கனவுகள் எத்தனை எத்தனை? குவாரண்டைன் கோட்பாடுகளுக்குள் அடைபட்டுக் கிடக்க முடியாமல் அலறிய காதல் பறவைகள் எத்தனை எத்தனை ? யாரும் நினைத்திருக்கவில்லை. தங்களுக்காய் கடல் விரித்து வைத்த மணல் வெளிகளை தீண்டமுடியாக் காலம் வரும் என யாரும் நினைத்திருக்கவில்லை. தங்களுக்காய் அரும்புகள் விரும்பிச் சிரிக்கும் பூங்காங்களில் புக முடியாத காலம் வருமென யாரும் நினைத்திருக்கவில்லை.



இந்தக் கோவிட்டின் ஆட்டம் நம்மை வெளிச்சத்தின் பெருவெளியிருந்து, இருட்டின் தனி அறைகளுக்குள் தள்ளி விட்டது. ஒரு பெருங்கடலை எப்படி ஒரு சிப்பியின் ஓட்டுக்குள் சிறை வைப்பது. ஒரு பெருங்காற்றை எப்படி ஒரு சங்கின் காதுக்குள் ஒளித்து வைப்பது ? ஒரு பெருமழையின் சீற்றத்தை எப்படி ஒரு சிறு தாவரத்தின் மெல்லிய இலையில் பூட்டி வைப்பது. காதலும் அப்படியே! எப்படித் தான் என் சுனாமிக் காதலை ஒரு சுருக்குப் பைக்குள் திணித்து வைப்பேன்.



உனக்கான சிந்தனைகளின் நீட்சியில், நமக்கான தடைகள் வந்து நிற்கின்றன. உனது குரலோசைகளைக் கூட வீடுகளின் அறைகளுக்குள் ரகசியமாய்க் கேட்கும் அவஸ்தை எனக்கு. தனிமைக் காதலர்களின் தேசிய கீதத்தையே இந்த ஊரடங்கு வந்து ஒரேயடியாக உயிரடக்கிவிட்டதே. ஒரு ஸ்மார்ட் போனின் வீடியோ காலில் தீர்ந்துவிடுமா என்ன ஒரு பெருங்கனவின் தாகம் ?

உன் உயிர்த்தீண்டல் கொண்டு வரும் ஒரு கண காதல் பிரவாகத்தை, ஸ்மார்ட் போனின் காலாவரையற்ற பிரயோகங்கள் கூட பிரதியெடுக்க முடியாது. சீண்டலின் வெப்பத்தை, பேட்டரியின் வெப்பம் தாக்குப் பிடிக்க முடியாது. எத்தனை செல்பிக்கள் வந்தாலும் உனது புன்னகையின் புனிதத்தை எனக்குள் பதியமிட முடியாது. இப்படித் தான் புலம்பிக் கொண்டிருந்தேன், கவிதைகளால் அமைக்கப்பட்ட கட்டுரைகளிலும், கட்டுரைகள் போல் கட்டவிழ்ந்து புரண்ட கவிதைகளிலும்.

ஏதோ தளர்வுகளின் சாளரம் வழியே மெல்லமாய் கனவுகளின் சிறகுகள் உள் நுழைகின்றன. சமூக இடைவெளியின் இறுக்கங்கள் மெல்ல மெல்ல தளர்ந்து கொண்டிருக்கின்றன. எப்படித் தவித்தேன் நான் ! ஒரு நூலிழை இடைவெளியைக் கூட பிரபஞ்ச அவமானமாய்க் கருதியவன் நான். ஒரு மயிரிழை விலகலைக் கூட மலையளவு என்றவன் நான். இங்கே இருவருக்கு இடையே ஆறடி இடைவெளி என்றார்கள். ஆறடி இடைவெளி ஒரு சவப்பெட்டியைச் சுமக்கும் இடைவெளியல்லவா ?

17 ஆம் பக்கம் பார்க்க...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Covid19 vs Teens
# கோவிட் கால காதல் கடிதம்

உனக்கும் எனக்கும் இடையே கிடக்கும் இந்த ஆறடி இடைவெளி நம் ஆனந்தம் செத்ததன் அடையாளமா ?

எச்சில்கள் தானே காதலின் ஈர வரம் ! உதடுகளில் மின்னும் ஈரத்தின் கவிதைப் பதிவுகள் தானே காதலின் உன்னத காவியம். அதையே சானிடைசர்களால் தடைசெய்வது காதலுக்கு எதிராய் சாத்தான் நிகழ்த்தும் நீள் யுத்தமா ? எச்சில்களின் வழியே காதல் பரவியதைத் தடுத்து கொரோனா பரவ வழிவகை செய்தது காதல் தேசத்தின் மேல் தொடுக்கப்பட்ட மிகப்பெரிய வன்முறை அல்லவா ?

அதைக் கூட மன்னித்து விடலாம். உன் பேரழகின் இதழ்களை மாஸ்க்களின் விரல்கள் ஒளித்து வைத்திருப்பதை எந்தக் காலத்திலும் மன்னிக்க முடியாது. ஆயிரம் கதைகள் சொல்லும் உனது முகத்தின் அசைவுகள் இப்போது புதைகுழிக்குள் முனகும் விதைகளைப் போல மௌனிக்கின்றன. உன் கண்களின் பாஷைகளை மட்டுமே பார்க்கும் எனக்கு, உன் கன்னத்தின் ஓசை தெரியாமலேயே போய்விடுகிறது. தங்கத்தில் போட்டால் கூட இந்த மாஸ்க் என்பது காதலர்களின் மிகப்பெரிய எதிரியே. அந்த கூர்நாசியின் எழிலை குதறித் தள்ளி, அந்த இதழ்களின் இளமையை இருட்டறையில் அடைத்து, இரு விழிகளுக்கு மட்டுமே அழுத்தம் கொடுக்கும் அழகிய அவஸ்தை அது. உன் ஈர நாவு தீண்டும் ஓர உதடுகள் தானே என் இதயத்தின் துடிப்பை இரட்டிப்பாக்கிக் கொண்டிருந்தது.



உன் சிரிப்பின் ஆயுதம் தானே என் பிடிவாதங்களின் கடிவாளங்களை அறுத்தெறிந்து கொண்டிருந்தது. இப்போது மாஸ்க்களின் மயானத்தில் அல்லவா காதலின் சடுகுடு ஆட்டம் ?

இதயங்களுக்கு இடப்பட்ட திரைகளை அவிழ்த்து விட்டு, காதலின் இராகம் மீட்டும் நமக்குள் இந்த முகத்தின் முகமூடி சீனச் சுவரைப் போல நீள்கிறது.

இந்தக் கடிதம் என் புலம்பலின் பிரதிநிதி. தேக்கி வைத்திருந்த ஏக்கங்களின் மடை திறப்பு. பதுக்கி வைத்திருந்த பாசத்தின் நாலு கால் பாய்ச்சல்.

காதலுக்கு இந்தக் காத்திருப்பு அவசியமே. !

நமது காதல், நேசத்தின் அடர்த்தியில் நெய்யப்பட்டிருக்கிறதா, அல்லது வெறும் சிற்றின்பத்தின் சுவர்களால் கட்டப்பட்டிருக்கிறதா என்பதை அறிந்து கொள்ளும் காலம் இது. சிற்றின்பச் சருகுகள் இந்த இடைவெளியின் வெப்பத்தில் சாம்பலாகி மறைந்திருக்கும்.

நமது காதல் இதயத்தின் ஆழத்தில் நடப்பட்டிருக்கிறதா, அல்லது விரல்களின் நுனியில் இடப்பட்டிருக்கிறதா என்பதை அறியும் காலம் இது. இதயத்தில் வேர்விட்ட காதல் மழை பொழிகையில் மீண்டும் துளிர்க்கும். விரல் நுனியில் இடப்பட்டிருக்கும் காதல் இந்த சானிடைசர் காலத்திலேயே சறுக்கிப் போய்விடும்.

நமது காதல் ஒற்றைச் சிந்தனையில் வாழ்கிறதா, அல்லது அலை பாயும் மனதுக்குள் அழிகிறதா என்பதை அறியும் காலம் இது. உண்மைக் காதல், விஸ்வரூபமாய் தொடரும். மற்ற காதலோ மறந்து போன பரண்களுக்குள் புரண்டு கொள்ளும்.

இந்தக் காலம் காதலின் பரிசோதனைக் காலம். இந்தக் காலம் காதலைச் செதுக்கும் காலம். உலையில் இடுகின்ற தங்கம், உருகினாலும் தங்கமாய் வழியும். ஆபரணமாய் அழகாகும். உலையில் விழுகின்ற துரும்போ காணாமல் போய்விடும். பயனற்று மறையும். இந்தக் காலம் உண்மைக் காதலை இதயத்துக்கு உணர்த்தும், பொய்யான காதலின் விறகுகளை எரிக்கும்.

''பிரிய காதலியே, எனைப் பிரியாக் காதலியே''

இந்த காலம் உனக்கும் எனக்குமான புனிதக் காதலை அர்த்தமாக்கியிருக்கிறது. உனக்கும் எனக்குமான ஆத்மார்த்தக் காதலை ஆழப்படுத்தியிருக்கிறது. அதற்காய் நான் கோவிட்டுக்கு நன்றி சொல்கிறேன்.

இதுவும் கடந்து போகும். சில காலங்கள் விரைவாக விலகும். சில காலங்கள் நத்தை போல நகரும். எது எப்படியெனினும் விலகாத நிலைகள் என்று எதுவுமே இல்லை. இந்த கொரோனா காலமும் அப்படியே. விலகும், அகலும்.

உனக்கான என் காதல் இப்போது புதையலாய் காத்திருக்கிறது. நாளைய வெளிச்ச விழுதுகள் அதில் விழும்போது ஒளியின் பிரதிபலிப்பு பல மடங்கு அதிகமாய் இருக்கும். காரணம் நான் காதலிப்பது உனது சுவாசத்தில் நிலைப்பதற்காக, தற்காலிக இன்பங்களில் தலைசாய்ப்பதற்கல்ல.

காத்திருக்கிறேன்.. இந்த காதலர் தினத்தில், என் காதலின் வனத்தில் உன் நினைவுகளெனும் சிட்டுக் குருவிகளைப் பறக்க விடுகிறேன். அடுத்த முறை நாம் அந்த நினைவுக் குருவிகளின் இசைகளை தலைகோதும் தருணங்களோடு சந்திப்போம்.

**உண்மைக் காதலுடன்**
**உன் காதலன்**

## 'தூவானம்' கருப்பாடல் வெளியீடு



வசந்தம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிவரும் தேசிய விருது பெற்ற கலை, இலக்கிய சஞ்சிகை நிகழ்ச்சியான தூவானத்தின் கருப்பாடல் வெளியீடு அண்மையில் சுயாதீன தொலைக்காட்சி வளாகத்தில் இடம்பெற்றது. இப்பாடலை இசையமைத்து பாடியுள்ளார் திரைப்பட இசையமைப்பாளர் சதீஸ் வர்சன். பாடல் வரிகளை ''தூவானம்'' நிகழ்ச்சியின் தயாரிப்பாளரும் திரைப்பட பாடலாசிரியருமான கவிஞர் பொத்துவில் அஸ்மின் எழுதியுள்ளார். இலங்கையின் நான்கு திசைகளும் அழகுற காட்சிப்படுத்தப்பட்டுள்ள இப்பாடலை சங்கர் புஸ்பராஜான் சிறப்பாக செம்மையாக்கம் செய்துள்ளார். பிரபல இலங்கை தமிழ் நடிகை நிரஞ்சனி சண்முகராஜா. இதனை வெளியிட்டு வைத்தார். படத்தில் சிரேஸ்ட நிகழ்ச்சி தொகுப்பாளர் நாகபூசணி கருப்பையா,நடிகை நிரஞ்சனி சண்முகராஜா, வசந்தம் தொலைக்காட்சியின் நிர்வாக இயக்குனர் சரத் பெரேரா,முகாமையாளர் எஸ்.கோணேஸ், நிகழ்ச்சி தயாரிப்பாளர், பாடலாசிரியர் அஸ்மின்,செம்மையாக்குனர் சங்கர்புஸ்பராஜன் ஆகியோரை காணலாம்.








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# யேர்மனியில் கி.மு. 13 இல் கட்டப்பட்ட மிக பழமையான பாலம்

**Dr.சுபாஷினி (யேர்மனி)**

ஜெர்மனி மைன்ன்ஸ் நகரில் உள்ள ரோமானியர் காலத்து நீர் மேலாண்மை பயன்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட ஒருவகை பாலத்தின் எஞ்சிய பகுதிகள். இது கட்டப்பட்ட ஆண்டு கி.மு. 13. ஏறக்குறைய இரண்டிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தூரம் வரை இந்த பாலத்தின் எஞ்சிய பகுதிகள் வரிசையாக நிற்பதை இந்த மைன்ஸ் நகரில் காணலாம். ரோமானியப் பேரரசின் ஆட்சிக்கு கீழ் ஜெர்மனி இருந்த காலகட்டமான இன்றைக்கு ஏறக்குறைய 2000 ஆண்டுகள் காலகட்டத்தில் ரோமானிய படை வீரர்கள் கட்டிய கட்டுமானங்களில் எச்சங்களை இந்த நகரில் இன்றளவும் காண முடிகிறது.

இந்த மைன்ன்ஸ் நகரம் பிராங்க்பர்ட் நகரிலிருந்து ஏறக்குறைய முப்பது கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் ஒரு வரலாற்று சிறப்புமிக்க நகரம் ஆகும்.




# Pettakam | Treasure box



**Bavvatharani R**
**Nallur**

ஆர மிவையிவை
பொற்கலம்
ஆனை யிவையிவை
ஒட்டகம்
ஆட லயமிவை மற்றிவை
ஆதி முடியொடு பெட்டகம்
ஈர முடையன நித்திலம்
ஏறு நவமணி கட்டிய
ஏக வடமிவை மற்றிவை
யாதும் விலையில்
பதக்கமே. 334

**Kalingattupparani 336**

Pettakam is mostly means treasure box. It is found in many sizes. Each type of Pettakam is made for different uses. It is a safe with lock protection feature used by ancient Tamil people to store their valuables. Its use was more common in the homes of those who had the facility to store goods safely. People locks important items in it. The petttakam was in use in many places in Jaffna. Some of these treasure boxes was also used to store grains such as paddy. They found in the temples is with beautiful carvings.

The richest and rich peoples' houses adorned with beautiful pettakams. They are kept in the hall, shrine rooms and varandahs of homes. In the Shrine rooms they keep pettahams with secret shelves to keep jewels and lingams, valampuri conch, elephant ivories, copper, brass and silver vessels used for pooja.

In the libraries, temples and some houses people keep (sacred Palmyrah leaves) olai suvadical ,rare books and other holy scripts.

Many Jaffna Tamils have acres of paddy lands. Therefore, people have nellu pettaham to keep paddy grains. That paddy is used to preserve and protect it from insects and rats.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மூடநம்பிக்கைக்குப் பின்னால் இருக்கும் அறிவியல் என்ன?

**வெ**ளியே செல்பவரைக் கூப்பிடாதே, நிலத்தில் படுத்து இருப்பவரைக் கடந்து செல்லாதே மற்றும் அடடா, பல்லியே சொல்லிவிட்டது. அப்போ நல்ல சகுனம் தான்! என்று பெரியோர் சொல்வதை நீங்கள் அடிக்கடி கேட்டு இருப்பீர்கள். இவ்வாறான மூடநம்பிக்கை எனப்படும் அறிவுக்குப் பொருந்தாத, பழக்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்து அல்லது கோட்பாடுகள் எமது தமிழர்களால்

Dr.நிரோஷன் தில்லைநாதன்
(ஜேர்மனி)

மட்டும் நம்பப்படுவது அல்ல, ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு கலாச்சாரத்திலும் விதம் விதமான வகைகளில் காணப்படுகின்றது. மூடநம்பிக்கை எவ்வாறு உருவானது என்பதைப் பார்ப்போம். எமது முன்னோர்களின் காலத்தில், அதாவது அறிவியல் சரியாக வளர்ச்சி அடையாத காலத்தில், நடந்த ஏதாவது ஒரு சம்பவத்திற்குக் காரணம் தெரியாமல் அவர்கள் அறிந்ததை, தெரிந்ததை வைத்துக் கூறப்பட்ட விளக்கங்கள் தலைமுறை தலைமுறையாகக் கொண்டு செல்லப்பட்டு, இன்று மூடநம்பிக்கையாகக் கருதப்படுகின்றது. ஆனால், எல்லா மூடநம்பிக்கையும் அர்த்தம் இல்லாத நம்பிக்கை என்று சொல்லமுடியாது! அறிவியல் சாரம் உள்ள எவ்வளவோ நம்பிக்கைகளும் உண்டு. இன்று சில மூடநம்பிக்கைகளும் அவற்றின் அறிவியல் சார்ந்த அர்த்தங்களையும் பகிர்ந்துகொள்கிறேன்.

**1. ஆடி மாதத்தில் திருமணம் வைத்தால் அல்லது கணவன் மனைவி அந்நேரம் சேர்ந்தால் ஆகாது**

இந்த மூடநம்பிக்கைக்கு அர்த்தம் என்னவென்று எவரிடமும் கேட்டால், ஆடியில் பிறக்கும் குழந்தை எதிர்காலத்தில் திருடன் ஆகிவிடும் என்று சொல்லி மழுப்பி விடுவார்கள். ஆனால் இதன் அறிவியல் ரீதியான காரணம் மிகவும் அர்த்தமுள்ளது ஆகும். பொதுவாக ஆடி மாதத்தில் கணவன் மனைவி சேர்ந்தால் அடுத்த வருடம் சித்திரை, வைகாசி மாதங்களில் குழந்தை பிறப்பதை எதிர்பார்க்கலாம். எனவே அந்த மாதங்களில் இருக்கும் உச்ச வெயிலை ஓர் சிறு குழந்தையால் தாங்க முடியாது. அது முன்னோர்களுக்கு நன்றாகவே தெரிந்து விட்டது. ஆனால் கணவன் மனைவியிடம் வெயிலைக் காரணமாகச் சொன்னால் விடவா போகிறார்கள்? இல்லையே, எனவே இப்படி ஒரு திருடன் கதையைக் கட்டிவிட்டார்கள்.

**2. இரவு நேரங்களில் மரத்தின் கீழ் நிற்க வேண்டாம் அல்லது மரத்தின் கீழ் தூங்கினால் பேய் பிடித்து விடும்**

இந்த நகைச்சுவையான மூடநம்பிக்கைக்குக் கூட ஓர் சிறப்பான அறிவியல் ரீதியான அர்த்தம் உள்ளது. பொதுவாகப் பகல் நேரத்தில், சூரிய



ஒளி இருக்கும் வரை தாவரங்கள் கரியமிலவாயு (carbon dioxide) உள்ளெடுத்து ஆக்சிசனை (oxygen) வெளியிடுவன. ஆனால் இதுவே சூரிய ஒளி இல்லாத இரவு நேரத்தில் இந்தச் செயற்பாடு எதிர்மாறாக ஆகிவிடும். இரவில் ஆக்சிசனை உள்ளெடுத்து கரியமிலவாயு வெளியிடப்படுகிறது. எனவே இரவு நேரங்களில் நாம் ஒரு மரத்திற்குக் கீழ் நிற்கும் போது அல்லது தூங்கும் போது அந்த மிகவும் ஆபத்தான கரியமிலவாயு சுவாசிக்க வேண்டி வந்துவிடும். ஆனால் இப்படி அறிவியல் விளக்கம் கொடுத்தால் யார் தான் கேட்கப் போவது, எனவே பேய், பூதம், பிசாசு பிடித்து விடும் என்று சொல்லி பயம் உறுத்தி விட்டார்கள்.

**3. எங்கும் செல்லும் போது பூனை குறுக்கே சென்றால் போகின்ற வேலை நடக்காது**

நான் எவ்வளவோ ஆராய்ந்து பார்த்தேன், ஆனால் இதற்கு அறிவியல் ரீதியான காரணத்தை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை நண்பர்களே. எனவே, நான் நினைப்பது இது தான்: முன்னொரு காலத்தில் ஒரு பாட்டி நடந்து சென்ற போது ஏதாவது ஒரு கெட்ட சம்பவம் நடந்து இருக்கும். உடனடியாக அதற்குக் காரணம் என்னவென்று தேடிய பாட்டி, தற்செயலாகக் குறுக்கே சென்ற பூனை மேலே பழியைப் போட்டிருப்பார். பூனை குறுக்கே சென்ற காரணத்தால் தான் இந்தச் சம்பவம் நடந்துவிட்டது என்று கூறி, இதைத் தலைமுறை தலைமுறையாகச் சொல்லி வந்திருப்பார்கள். ஆனால் அதற்கு அந்தப் பூனை என்ன செய்வது? அது ஏதும் உணவைத் தேடி அவ்வழியாகச் சென்று இருக்கும்.

ஆக மொத்தத்தில் எனது கருத்து என்னவென்றால்: எல்லா மூடநம்பிக்கையும் முட்டாள் தனமான நம்பிக்கை கிடையாது. அதே போன்று எல்லா மூடநம்பிக்கைக்குப் பின்னாலும் அறிவியல் ரீதியான அர்த்தமும் இருக்காது . எது சரி, எது தவறு என்பதை நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும்!

சரி, இனி நீங்கள் கூறுங்கள். உங்களுக்கும் ஒரு மூடநம்பிக்கைக்குப் பின்னால் இருக்கும் மூல காரணம் என்னவென்று தெரியுமா?

எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh) அறியத் தாருங்கள்!


மாதொரு பாகன் திருமண சேவை
யேர்மனி
அன்பான எமது தமிழ் உறவுகளே வீட்டில் இருந்தபடியே வரன்களை தேடலாம்!. அனைத்து சமுதாயத்தினருக்கும் நல்லதொரு மணவாழ்க்கை மலர்ந்திட எங்களை அணுகவும். முற்றிலும் இலவசமாக திருமண பொருத்தம் துல்லியமாக கணித்து கொடுக்கபடும்.

தொடர்புகளுக்கு:
Tel:49 015738324103

Asia Lebensmittel
Kaiserstraße 16, 42329 Wuppertal, Germany


+49 176 62728598 | 020289012114

Wuppertal நகரில்...
உங்கள் இல்லத்திற்கு வேண்டிய அனைத்து மளிகைப் பொருட்கள் மற்றும் பசுமையான மரக்கறி வகைகளுக்கும் கடல் உணவு வகைகளுக்கும் இன்றே நாடுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உன்னையும், என்னையும் பெற்றது காதல்

**கரிணி (ஜேர்மனி)**

இந்த உலகம் அன்பினை காதலாக நுகர்கின்றது. யோகிகள் அன்பையும் காதலையும் ஒன்றாகவே பார்க்கின்றனர். காதலின் அடியாழத்தில் அன்பும், அன்பின் மேற்பரப்பில் காதலும் பின்னிப்பிணைந்து கடலும் அலையும் போல இயங்குகின்றன. அலைகள் கரையைத் தழுவித் தழுவி மீள்கின்றன, அலைகின்றன. ஆனால் கடலின் ஆழ் மையமோ சாட்சியாக அமைதியாக வீற்றிருக்கின்றது. அலைகள் தரையைத் தொட்டவுடன் ஆழத்தை நோக்கி நகர்கின்றன. பின்னர் ஆழத்திலிருந்து அலைகள் உருவாகி கரையை நோக்கி வருகின்றன. இரண்டும் ஒரே இணைப்பின் இரு வேறுபட்ட வெளிப்பாடுகள் மட்டுமே. சிறு அணு முதற்கொண்டு அனைத்தும் இம்மியளவும் பிசகாத அன்பினால் இணைக்கப்பட்டு ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன.

காதல் போயின் சாதல் என்பார்கள். தன்னைத் தானே இரசிக்க வைக்கும் மந்திரம் இந்த காதல். வெறும் இரசாயனங்களில் மாறுதல் மட்டுமல்ல மிகப்பெரும் மனோ சக்திநிலை கொண்டது காதல். அவளாக அவனும், அவனாக அவளும் மாறிப் போவதும், இறந்தகாலத்திலும், நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் ஒருங்கே கற்பனைகளோடு கரைந்து போவதும் இக்காதலில் தான்.

ஆண்டாள் கண்ணன் மேல் கொண்ட காதலும், மாணிக்க வாசகர் சிவன் மேல் கொண்ட காதலும் தான் இன்று கொண்டாடப்படும் திருப்பாவை, மற்றும் திருவெம்பாவை. சரணாகதி அர்ப்பணிப்பு என்பது மனதினை பீடிக்கும் மலக்குற்றங்களை நொடியில் களையக் கூடியது. இது அவ்வளவு இலகுவான இடத்தில் நிகழ்வது என்றால் அது ஆழமான காதலில் தான். இங்கு 'நான்' என்பது அழிந்து 'நீ' ஆகுறது. 'எனது' என்பதும் 'உனது' ஆகிறது. உனக்கு பிடித்ததே எனக்கும் பிடிக்கிறது. ஏன் வாழ்வும், ஆன்மாவும் மொத்தமாக சமர்ப்பணம் ஆகிறது. முற்றிலுமாக கரைந்து போகவும் முடிகிறது. காதலில் மட்டும் எப்படி இது சாத்தியம். இது என்ன மாய மந்திரம்?

பசி வந்தால் பத்தும் பறக்கும் என்பார்கள். காதல் தன்னையே மறக்க வைத்துவிடும். அக்கம் பக்கம் மறந்துவிடும், பகை, நட்பு மறந்துவிடும், அட அம்மா அப்பாவையே மறந்து விடும். அதனாலேயே காதல் கண்ணை மறைக்கும் என்பார்கள். அது தனிப்பட்ட உலகில் வாழ வைத்துவிடும்.

அசாத்திய துணிச்சல் காதலித்துக் கொண்டிருப்பவர்களிடமே அதிகம் காணப்படுகிறது. இதுவரை பயம் கொண்ட விடயங்களை சந்திக்க துணிதல் முதற் கொண்டு தன் இணைக்கு ஆபத்து வரும் காலத்தில் தன் உயிரையே பணயம் வைப்பது மற்றும் 'நிலவை பிடித்துத் தரவா?', 'மேகத்தில் வீடு கட்டவா?' என தன் தகுதியை உயர்த்தி எடை போடுவதும் இக்காதலே. காதலிப்பவர்களிடம் மென்மையான இளகிய சுபாவம் வந்துவிடும். ஏனோதானோ என திரிபவர் கூட காதலில் விழுந்தால் நடை உடை பாவனையில் மாறிவிடுவர்.

இது பலருக்கு வினோதமான சிறை, தானே தன்னை உள்ளே வைத்து பூட்டிக் கொண்டு திறப்பும் தன்னிடமே இருக்கும் போது வெளிவர முடியாமல் தவிக்கும்படி செய்துவிடும் இக்காதல். இதயம் பாரம் கொண்டு அறுந்து வயிற்றுக்குள் விழுந்து விடுமோ என்பது போன்ற பற்பல மாயையினைத் தரும். காதல்தான் இலகுவில் பந்தங்களை உருவாக்குகிறது, அந்த நிலை முறிவடையும் போது ஏற்படுத்திய பந்தத்தால் மீள முடியாது தன்னையே கருக்கிவிடவும் கூடியது.



உண்மையில் ஆழமான காதலின் நிலையில் மனம் அற்றுப் போகின்றது. ஒருவருக்குள் ஆணும் உண்டு, பெண்ணும் உண்டு. ஆணானவன் தனக்குள் உள்ள பெண்மையை உணர இன்னொரு பெண்ணின் துணை நாடுகிறான். அது போலவே பெண்ணும் தனக்குள் இருக்கும் ஆணை உணர்ந்து முழுமை பெற இன்னொரு ஆணின் துணை தேடுகிறாள். அதனாலேயே அணைக்கும் போதோ, முத்தத்தில் மூழ்கும் போதோ கண்கள் தாமாகவே மூடிக் கொள்கின்றன. எதிரே இருப்பவர் மறைந்துவிடுகிறார். மனமும் கரைந்து விடுகிறது. தனக்குள் ஆணும் பெண்ணும் சேர்ந்த முழுமை உணரப்படுகிறது. ஏனெனில் உயிர்கள் ஆணும் பெண்ணுமான பூரணத்தில் இருந்தே தோன்றியவை. முழுமை நிலையை அடையும் தேடல் இயற்கையாகவே அமையப்பெற்றது. அதனை தனக்குள் தனிமையில் தன்னிச்சையாகவே உணர இறைத் தியானம் உதவும். பூரண இறைநிலையை அகத்தில் கண்டு அப் பூரணமாகவே மாறி விட முடியும். சாதாரண நிலையில் உள்ளவர்களுக்கு எதிர்பாலினத்தில் ஈர்ப்பு ஏற்படும். இருப்பினும் கரைந்து போகச் செய்யும் இதுவும் தியான நிலையே. இந்நிலை அற்ற காதலும், கல்யாணமும் வெறும் வெற்றுச் சடங்குகளே.

கனிந்து கரைந்த காதல் கடைசிவரை குறைவுபடாமல் வளருமாயின் அதன் தன்மை எவ்வளவு உன்னதமானது. கண்டதும் காதல் கல்யாணத்தோடு ஆவல்கள் குறைந்திட பின் 'நான் இப்படித்தான் விரும்பினால் கூட இரு இல்லா விட்டால் போய்க்கொண்டே இரு' என்பது போன்ற தளர்வற்ற இறுக்க நிலை. கைக்குக் கிடைக்கும் வரை உள்ள ஏக்கமும் எதிர்பார்ப்பும் தம்முடையதாகிவிட்ட பின்னர் காட்டப்படுகின்ற அலட்சியம், 'நீயும் நானும் வேறா இருவரும் ஒன்றல்லவா' என்ற உணர்வை கொடுத்து விட்டு 'உன் வீட்டார்', 'என்வீட்டார்' என்ற பாகுபாடு, என் உணர்வுகளை மட்டும் புரிந்து நடந்து கொள்ள வேண்டும் என்ற சுயநல எதிர்பார்ப்பு, அடிதடி, கண்டிப்பு, தண்டிப்பு இவையெல்லாம் காதலை கருக்கிவிடக் கூடியவை. இவை இருக்குமிடத்தில் 'காதல்' எனும் அற்புதம் தங்குவதில்லை.

சுக்கிலமும், சுரோணிதமும் வெறுமனே கலப்பது அல்ல காதல். சூரியன் போன்ற தூய ஒளியை அகமும், புறமும் பரவச் செய்வது காதல். காமம் என்பது கள்ளுண்டவர்க்கும் வரும், கஞ்சா உண்டவர்க்கும் வரும். அதற்கு காதல் எனும் ஒப்பனை தேவையில்லை. பண்போடு நாகரிகமான அணுகுமுறையோடு கூடிய காதல் அனைவராலும் வாழ்த்தக் கூடியதும், நீடூழி வாழக் கூடியதுமாகும். அக்கறையோடு கூடிய காதல் அசாத்தியமான பல மாற்றங்களைக் கூட செய்துவிடும். எப்பேற்பட்ட சண்டாளனையும் சாதுவாக்கிவிடும்,

யோகியர் பார்வையில் பற்றறுப்பதே முதல் நோக்கம் என்றாலும். பற்று என்பது எது எனத் தெரிந்தால் தானே அதை அறுப்பதற்கு. ■

28 ஆம் பக்கம் பார்க்க...









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (Germany Nord Rhein Westfalen) மாநிலத்தின் முதலமைச்சர் ஆர்மின் லஸ்செற் (Armin Laschet)

## யேர்மனியின் CDU கட்சியின் புதிய தலைவராகவும் கான்சிலர் வேட்பாளராகவும் தெரிவானார்!

**வைரமுத்து சிவராசா**
(யேர்மனி)




தற்போது யேர்மனியின் மிக உயர்ந்த அரசியல் பதவியில் இருப்பவரான அங்கலா மேக்கல் [Angela Merkel] அவர்கள் இந்த வருடம் செப்டெம்பர் மாதத்துடன் இளைப்பாறுவதால் கட்சியின் புதிய தலைவராக நோத் றைன் வெஸ்பாளின் [Nord Rhein Westfalen] முதலமைச்சராகத் தற்போது இருந்துவரும் ஆர்மின் லஸ்செற் [Armin Laschet] அவர்கள் தெரிவாகியுள்ளார். இவர் தான் 2021 செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள கான்சிலர் பதவிக்குப் [Bundes Chancellor] போட்டியிடுவதற்குத் தெரிவாகியுள்ளார்.

யேர்மனியின் பலம்பொருந்திய அரசியல் கட்சியின் ஊனுரு [Christ dememokratische Partai] மத்திய குழுக்கூட்டம் முதன்முறையாக இணையவழியில் 16.1.2021 அன்று நடைபெற்றது. 1001 அங்கத்தவர்கள் வாக்களிக்கத் தகுதிபெற்றிருக்க மூன்றுபேர் இதில் போட்டியிட்டனர். இறுதியில் 521 வாக்குகளைப் பெற்று ஆர்மின் லஸ்செற் அவர்கள் வெற்றிபெற்று கட்சியின் தலைவராகத் தெரிவானார். எதிர்வரும் 26.9.2021 நடைபெறவுள்ள கான்சிலர் பதவிக்கான வேட்பாளராக இவர் போட்டியிடவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் யேர்மனியிலுள்ள 16 மாநிலங்களில் அதிகூடிய சனத்தொகையைக் கொண்ட நோத் றைன் வெஸ்பாளின் மாநிலத்தின் முதலமைச்சராக 27.6.2017 தொடக்கம் இருந்துவருகின்றார். முன்னர் இந்த மாநிலத்தின் குடும்பநல அமைச்சராகவும் [2012 –2017] இருந்ததுடன் இந்த மாநிலத்தின் கட்சித்தலைவராகவும் பதவி வகித்தவர். தற்போது இந்த நாட்டின் ஊனுரு கட்சியின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்.

18.2.2021அன்று 60 வயதை அடையும் இவர் முன்சன [München] பொண் [Bonn] நகரங்களிலுள்ள பலகலைக்கழகங்களில் பட்டப்படிப்பை முடித்தவர். மனைவி 3 பிள்ளைகளுடன் ஆகன் [Aachen] நகரை வதிவிடமாகக் கொண்டவர்

### உலகின் அதிகாரம் மிக்க பெண்மணி

எதிர்வரும் 26.9.2021 அன்று யேர்மனியின் பாராளுமன்ற பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. 2005 ஆண்டு தொடக்கம் 2021 வரை 16 வருடங்கள் கான்சிலராகப் பதவி வகித்த உலகின்; அதிகாரம் மிக்க முதல் பெண்மணியாக விளங்கிய அங்கலா மேக்கல் அரசியலில் இருந்து ஓய்வுபெற இருக்கிறார். விடைபெறும் அம்மையாரை வாழ்த்துவோம்!..


# வெற்றிமணி திருமண சேவை



## நீங்களே பேசிக்கொள்ளுங்கள்



**மணமகள் தேவை**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் ஜெர்மனியில் nordrhein westfalen பகுதியை வசிப்பிடமாகவும் இருக்கும் பெற்றோர். ஜெர்மனியில் பிறந்து வளர்ந்த WHOLESALE CUSTOMER MANAGER ஆக பணியாற்றும் தங்கள் 27 வயது மகனுக்கு கிறிஸ்தவமதத்தைச் சேர்ந்த நல்ல குணமடைய மணமகளை தேடுகின்றனர் பெற்றோர். உறவினர் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு:- (0049)- 017691481889



**மணமகள் தேவை**

ஜெர்மனியை வதிவிடமாகக் கொண்ட 27 வயது மணமகனுக்கு செவ்வாய் தோஷம் உள்ள மணமகள் ஜெர்மனியை வதிவிடமாகக் கொண்டவரை எதிர்பார்க்கிறோம். மணமகன் கல்விப் தகமை (m.sc Account Manager) உயர் சைவ வேளான். 38 புள்ளி கிரகபாவம் விரும்பத்தக்கது. திருமணத்திற்கு பின்மணமகன் வசிக்கும் நகரில் வசிக்க விரும்புபவர்கள் விரும்பத்தக்கது. பெற்றோர் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.தொடர்புகளுக்கு:- 4915736472292

மணமகள், மணமகன் தேவைகளை பிரசுரிக்கலாம்.
**3 தடவை பிரசுரிக்க குறைந்த கட்டணமே அறவிடப்படும்**



**மணமகள் தேவை**

சாவகச்சேரி பிறப்பு இடமாகவும் இங்கிலாந்து Cambridge (uk) வசிப்பிடமாகக் கொண்ட 44 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை. (தொழில் அதிபர் : 9 வயதுடைய மகள் அவருடன் வசிக்கிறார்)
Tel:00447867805901 Cousin number number

### காதலர் தினம் மாசி மாதம் 14

இன்று காதலித்து திருமணம் செய்பவர்கள் தத்தம் விருப்பத்திற்கு பெற்றோரின் எதிர்ப்பையும் வென்று அவர்களது சம்மதத்துடன் திருமணம் செய்து கொள்கிறார்கள். ஒரு சிலர் விதிவிலக்காக இருந்தாலும் காலம் அவர்களையும் இணைத்தவிடுகிறது. காதலிக்காதவர்கள் பெற்றோருக்கு ஒரு பாரிய பொறுப்பை வழங்குகிறார்கள். அன்று போல் இன்றும் அவர்கள் தம்பிள்ளைகளுக்கு ஏற்றவரை தேடுதல் பொறுப்பான கடமையாக அமைகிறது. அவர்கள் தமது தேவைகளை நிறைவேற்ற வெற்றி மணி திருமண சேவை வழிவகுக்கும். நீங்களே உங்கள் பிள்ளைக்கு உரியவரை அவர்கள் பெற்றோருடன் பேசி முடிக்க மணம் முடிக்க முடியும். எந்த விதமான நன்கொடைகளும் அறவிடப்படமாட்டாது. ஆனால் உங்கள் தகவல்கள் சிறு விளம்பரமாக தொடர்ந்து 3 இதழ்களில் வெளிவர சிறுதொகை மட்டுமே அறவிடப்படும். திருமணம் பொருந்திவிட்டால் உடன் அறியத் தந்தால் மறு இதழில் அதனை நீக்கி விடுவோம். இங்கு ஒரே பக்கத்தில் மணமகன் தேவை.மணமகள் தேவை.மற்றும் இலவச திருமண சேவைகள் இடம்பெறும்.

**விளம்பர தொடர்புகள்:**
வட்சப்பில்: 00491631992334.
ஆன்மிகத் தென்றல் : த.புவனேந்திரன்
Telefon: +49 172 83 42 116

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாம் நாமாக இருக்கிறோமா?

றஜினா மகின்சன்
(ஜேர்மனி)

இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களின் விருப்பத்துக்கேற்ப வாழ்ந்து வருகிறான் என்பதில் ஐயம் இல்லை. பிறந்த பின்னர் பெற்றோர்களின் விருப்பங்களுக்காகவும் கனவுகளுக்காகவும் வாழ்ந்து வருகிறான். சிலர் பிள்ளைகளின் விருப்பத்துக்கு ஏற்றவாறு அவர்களின் விருப்பத்தை மாற்றி வாழ்ந்து வருகிறார்கள். சிலர் தங்களின் விருப்பத்துக்காகப் பிள்ளைகளை வளர்த்து வருகிறார்கள். கல்வி, திருமணம், அணியும் ஆடை, நண்பர்கள், உணவு போன்ற அனைத்தும் பெற்றோர்கள் நியமிக்கிறார்கள். பிள்ளைகளின் நலன் கருதியே இவை அனைத்தும் செய்கின்றனர். ஆனால் பிள்ளைகள் இவற்றினால் தங்களை இழந்து விடுகிறார்கள். தாமாகவே முடிவுகள் எடுக்க முடியாத நிலை ஏற்படுகிறது.

அதேபோல் பிள்ளைகள் சில விடயங்களைச் செய்து விட்டால் உடன் பெற்றோர்கள் கூறுவார்கள் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்று. மற்றவர்கள் விருப்பத்துக்கு வாழ்வதற்காகவா நாம் பிறந்தோம்? நாம் நாமாகவே இருந்தால் நன்று!

மற்றவர்களுக்காகக் கல்வி கற்க வேண்டும், மற்றவர்களுக்காகத் திருமணம் செய்ய வேண்டும், மற்றவர்களுக்காக எம் குணங்களை மாற்ற வேண்டும். மற்றவர்கள் யார்? மற்றவர்களுக்காக நாம் மாற்றத்தைக் கொண்டு வருவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும்.

திருமணம் ஆன பின் நாம் நாமாகவே இருக்க முடியாது. கணவனுக்கு அல்லது மனைவிக்குப் பிடித்த மாதிரி நடந்து கொள்ள வேண்டும். புகுந்த வீட்டுக்கு ஏற்றவாறு நடந்து கொள்ள வேண்டும். நாம் நாமாகவா இருக்கிறோம்? காதலிக்கும் போதும் மற்றும் திருமணம் செய்த பின்னர் நாம் நாமாகவே இருப்பது முக்கியம். உங்களை காதலில் தொலைத்து விடலாம் ஆனால் உங்களைத் தொலைத்து விட வேண்டாம்!

வேலை இடத்தில் நாம் நாமாகவே இருக்க முடியாது. வேற்று கருத்து கூற முடியாது. வேலை போய் விடும் என்ற பயம். இதேபோல் நம் வாழ்வில்




மற்றவர்களுக்காக வாழப் பழகிக் கொண்டால் நாம் நம்மை இழந்து மற்றவர்களாகவே மாறி விடுவோம். எனவே நாம் நாம் நாமாகவே இருப்போம். இல்லையேல் இருக்க முயல்வோம்.




# ஆரியை எங்கள் வீட்டுப்பிள்ளை என்று கொண்டாடிய மக்கள்!

கடந்த அக்டோபர் மாதம் 4 ஆம் தேதி தொடங்கிய பிக்பாஸ் சீசன் 4 நிகழ்ச்சி 17.01.2021 நிறைவடைந்தது. நேற்று மாலை 6 மணிக்கு தொடங்கிய பிக்பாஸ் இறுதிச்சுற்றுக் கொண்டாட்டம். நள்ளிரவு 12 மணி வரை சென்றது. கடைசியா நேர்மை வென்று விட்டது. பிக் பாஸ் டைட்டில் வின்னர் ஆரி.. ரன்னர்-அப் பாலாஜி முருகதாஸ்! ஆரி, பாலாஜி, ரியோ, சோம் மற்றும் ரம்யா ஆகியோர் இறுதிச்சுற்றுக்குள் சென்றனர். இந்நிலையில் இறுதிச்சுற்றில் ஒரு வின்னர் ஒரு ரன்னர் அப் மட்டுமே என்பதால் சோம், ரம்யா, ரியோ என மூன்று பேரும் முந்தைய சீசன் பிரபலங்களால் வெளியே அழைத்து வரப்பட்டனர்.இறுதியாக பிக்பாஸ் வீட்டுக்குள் இருந்த ஆரியையும் பாலாஜியையும் கமலே நேரடியாக சென்று அவர்களை ஜக ஜோதியாக வெளியே அழைத்து சென்றார். பெரும் சஸ்பென்ஸக்கு பிறகு வின்னரை அறிவித்தார் கமல். தான் வின்னர் என்று கேட்டதும் கண்கள் கலங்கிய ஆரி உருக்கமாக பேசினார். உங்களின் அனுமதியுடன் நான் இரண்டு பேரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கமலிடம் கூறினார். பேச்சாலும் உடல்மொழியாலும்



என்னுடைய செயலாலும் உங்களை காயப்படுத்தியிருந்தால் உங்களிடம் உங்கள் குடும்பத்தாரிடமும் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன் என மேடையில் விழுந்து மக்களிடமும் சக போட்டியாளர்களிடமும் மன்னிப்பு கேட்டார். சக போட்டியாளர்கள் இல்லாவிட்டால் தான் இந்த இடத்திற்கு வந்திருக்க முடியாது என்றும் கூறினார். மேலும் 5ஆம் வகுப்புக்கு பிறகு நான் முதல் இடம் வாங்கவே இல்லை. இப்போது முதல் இடத்திற்கு வந்துள்ளேன். நான் முதலிடம் பெற்றால் அதனை பார்த்து சந்தோஷப்படும் அப்பா அம்மா இப்போ இல்லை. ஆகையால் உங்களையும் எனக்கு வாக்களித்த மக்களையும் என் அப்பா அம்மாவாக நினைத்து ஆசிர்வாதம் வாங்கிக் கொள்கிறேன் என்று கம



லின் காலில் விழுந்தார் ஆரி. இதனை தொடர்ந்து ஆரிக்கு டைட்டில் வின்னர் கேடயத்தைக் கொடுத்த கமல், இந்தக் கேடயத்தை நானே வாங்கியது போன்ற பெருமை கொள்கிறேன் என்றார். அப்போது பேசிய ஆரி, நீங்கள் கூறினீர்கள் தப்பு என்றால் தட்டிக்கேட்பேன், நல்ல என்றால் தட்டிக் கொடுப்பேன் என்று, அதேபோல் தப்பு என்றால் தட்டிக் கேளுங்கள். நியாயம் என்றால் நிமிர்ந்து கேள் என மக்களுக்கு கூறினார். மோட்டிவேட்டர் ஆரி என்ற விருது ஆரிக்கு வழங்கப்பட்டது. மேலும் பிக்பாஸ் டைட்டில் வின்னர் பரிசாக 50 லட்சம் ரூபாய் அவருக்கு ரொக்கப் பரிசும் கிடைத்தது. திரைப்பட நடிகரான ஆரிக்குகிடைக்காத பெரும் அந்தஸ்த்து நான்கு மாதங்களில் பிக்பொஸ் மூலம் கிடைத்து விட்டது.

நான்கு மாதங்களாக லொக்டவுன் காலத்தில் மக்களும் பிக்பொஸ் போல் வீட்டுக்குள் அடைபட்டு இருந்த வேளை.ஆரியை தம்பிள்ளைபோல் தத்தெடுத்துக்கொண்ட தாய்மாரையும் தந்தைமாரையும் பார்த்திருக்கின்றேன். [உண்மையில் ஈழத்தமிழர்க்கு ஆரியின் மனைவி ஈழப்பெண் என்பதால் இந்த உணர்வு ஏற்படவில்லை என்பது பெருமைக்குரிய விடயம்.] எனக்கு பெரும் ஈடுபாடு இதில் கிடையாது. ஆனால் இதனை இரசித்த மக்களை நான் பெரிதும் இரசித்தேன். அவர்கள் லொக்டவுன் காலத்தில் மனவழுத்தம் இன்றி சிரித்து மகிழ்ந்திருக்க இந்த நான்குமாதம் அவர்களுக்கு பிக்பொஸ் கைகொடுத்தது உண்மையே!









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# பாரதிக்கு முன்னே பெண்ணியல் சிந்தனை இலங்கையில் பேசப்பட்டுள்ளது

**பாரதிக்கு முன் பெண்ணியல் சிந்தனையை விதித்த திருகோணமலை தி.த.சரவணமுத்துப்பிள்ளை**

பூட்டைத் திறப்பது கையாலே – நல்ல
மனந் திறப்பது மதியாலே
பாட்டைத் திறப்பது பண்ணாலே – இன்ப
வீட்டைத் திறப்பது பெண்ணாலே

என்றார் பாரதி. ஒத்த அன்பாலே ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம். அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறு இருந்தது எனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத்தின் கண் தோன்றும் உணர்ச்சியையே விரித்தலின் இது அகம் என்றார் நச்சினார்க்கினியர். அந்த அளவிற்கு இன்பம் தரும் ஆண் பெண் உணர்வின்பால் ஏற்பட்ட காதலர்கள் ஒன்றாய் இணைய நினைக்கின்ற தருணத்தில் தாகத்தின் நிமித்தம் கிண்ணத்தில் ஊற்றி வாயருகே ஏந்திய பாலைத் தட்டிப் பறிப்பது போல் அன்பான காதலரைச் சேரவிடாது தடுக்கின்ற வஞ்சகச் செயல் ஆண்பெண் உறவுக்குப் பங்கமாக அமைகின்றன.

பிரிவுக்கும் பிரித்தலுக்கும் வேறுபாடு உண்டு. தன் மகளுக்கு ஒருவனைப் பிடித்திருக்கின்றது அவனுடனே தன்னுடைய வாழ்க்கையை தொடர விரும்புகின்றாள் என்று தெரிந்தும் கூட புலம்பெயர்ந்த பெற்றோர் தம்முடைய பெண்மக்களை தாய்நாட்டிற்கு நயவஞ்சகமாக அழைத்துச் சென்று தாம் விரும்பிய ஒரு ஆணுக்குத் திருமணம் செய்து வைத்துவிடுகின்றனர். இத்தகாத திருமண முறைகள் எவ்வுலகம் சென்றாலும் பெண்களுக்கு நிகழ்கின்ற பாதகச் செயலாகத் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. தான் விரும்பிய கணவனைப் பெறமுடியாதது மட்டுமல்லாமல் பெண்கள் நினைக்கின்ற காரியங்களை மனதுக்குள் பூட்டி வைப்பதுடன் விட்டுக்



கொடுப்புக்கள், தியாகங்கள் என்ற கட்டுப்பாடுகளை தமக்குள் போட்டு அடிமைகளாக வாழவேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. ஆண் என்னும் அதிகாரம் தம்முடைய மரபணுக்களுக்குள் பதிக்கப்பட்டதாக இயல்பாகவே கருதுகின்ற ஆண்வர்க்கம் ஐரோப்பிய மக்களிடையேயும் காணக்கூடியதாக இருக்கின்றது. தற்போது சாதிப்பாகுபாட்டைக் காட்டி கூட்டைப் பிரித்துக் கோழியை விமானம் ஏற்றி நாடு கடத்துகின்றார்கள். பொருத்தமில்லாத துணையைத் தேடித்தருகின்றார்கள்.

இந்தப் பெண் அடிமைத்தனத்தை பாரதிக்கு முன்னமே திருகோணமலை திரு.தி.த.சரவணமுத்துப்பிள்ளை தன்னுடைய தத்தைவிடு தூது என்ற பிரபந்தத்திலே அழகாக எடுத்துக் காட்டியிருக்கின்றார். இந்;நூல் 1892 இல் வெளியிடப்பட்டது. தலைவன் தலைவியர்களில் ஒருவர் மற்றொருவர் பால் தமது காதலை வெளிப்படுத்தி தமது கருத்தை ஏற்றமைக்கு அறிகுறியாக ஒரு மாலையை வாங்கி வருமாறு கிளி,அன்னம், வண்டு, போன்றவற்றைத் தூதாக அனுப்புவதாக கலிவெண்பாவால் இயற்றப்படுவதே தூது பிரபந்தமாகும். காலத்துக்குக் காலம் இத்தூதுப் பிரபந்தம் மேகம், காற்று, போன்றவற்றைத் தூதாக அனுப்புவதாகப் பல மாற்றங்களைக் கண்டுள்ளது. முதற்தூது பிரபந்தமானது நெஞ்சுவிடு தூது உமாபதி சிவாச்சாரியாரால் இயற்றப்பட்டதாகும். இந்த வகையிலே காதலில் தோல்வியுற்ற ஒரு காதலனின் மன உணர்வுகளின் வரிகளாக வெளிவந்திருந்ததே தத்தைவிடுதூது என்னும் பிரபந்தம்.

பெண்கள் சில இடங்களில் பேசுவதற்கு ஆசைப்பட்டாலும் பேச்சு சுதந்திரம் கிடைப்பதில்லை. பேச்சு உரிமை கிடைக்கின்ற போது கூட சில சந்தர்ப்பங்களில் ஊமையாகி விடுகின்றார்கள். பொருத்தமில்லாத துணையைப் பணம் இருந்தால் வாழ்வு இனிக்கும் என்று திருமணம் செய்து கொடுத்துவிடுகின்றார்கள்.

செங்கமல வாள்விழியாட்
சேர்க்கக் கருதுமுவன்
மங்கை தனக்கேற்ற
மணவாளனோ புகலாய்
நங்கை நிலைக்கேற்க
நடக்கவலனோ புவியில்
கொங்குமலர் மாலை
குரங்கிற் களிப்பாரா
கோதையிட மிம்மாற்றங்
கூறுதியாற் பைங்கிளியே

என்று கிளியிடம் தூது சொல்லி வருமாறு தலைவியிடம் அனுப்புவதாக இப்பாடல் அமைகின்றது.

பெண்களுடைய பெருமைகளைப் புரிந்து நடந்து கொள்ளாத காரணத்தால் பெண்களைப் பேதையர்க்குத் திருமணம் செய்து கொடுத்து மண்ணில் அவர்கள் வாழுகின்ற காலமெல்லாம் வருந்தித் துன்புறுவதற்கு புலியின் வாயில் மானைக் கொடுக்கும் தந்தையர்கள் நரகத்திற்குரியவர்கள் என்றும் கூட்டுக்குள் கிளியை அடைத்து வைப்பது போல் வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைத்து பூட்டித் திறக்கும் பொருளாகப் பெண்ணை நினைக்கின்றார்கள். உண்பதும், உறங்குவதும், ஊர்க்கதைகள் பேசுவதும் பெண்கள் தொழில், பெண்களுக்குத் தமது கணவனே கடவுள், பெண்களுக்கும் அடிமைகளுக்கும் வேறுபாடு இல்லை என்று உளமார எண்ணுகின்றார்கள். ஆனால், பெண்கள் இல்லாவிட்டால் வீடு ஒரு காடாகும். பெண்கள் இருந்தால் காடும் ஒரு வளம்பொருந்திய வீடாகும். ஆனால் பெண்களோ இந்த உலகத்தில் வருந்துகின்றார்கள் என்பதை தத்தைவிடு தூதிலே சரவணமுத்துப்பிள்ளை அவர்கள் அழகாக எடுத்துக்காட்டியுள்ளார்.

மாதரார் தாமிலரேல்
மனையும் வனமா நல்
மாதரார் தாமுளரேல்
வனமும் வளமனையாம்
மாதரன்றோவிவ் வாழ்விற்
கருங்கலமாம்
மாதரன்றோ
வருந்துலரிம் மாநிலத்தில்
மாது சிரோன் மணிக்கிவை நீ
வகுப்பாய் பசுங்கிளியே

இப்பாடல்களின் வரிகள் அத்தனையும் பாரதியையும், ஈ.வெ.ரா பெரியாரையும் பெரிதாகப் பாதித்துள்ளன என்பதை அவரவர் பாடல்கள், கட்டுரைகளில் காணக்கூடியதாக இருக்கின்றது. எனவே பாரதிக்கு முன்னே பெண்ணியல் சிந்தனை இலங்கையில் பேசப்பட்டுள்ளது என்பது கண்கூடு.








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஏலையா க.முருகதாசன்

# உலகின் முதல் விஞ்ஞானி காட்டிடை வாழ்ந்த மனிதனே

உலகின் முதல் விஞ்ஞானி யாரென்றால், எந்தத் தயக்கமும் இல்லாத பதிலாக வெளிவருவது காட்டில் வாழ்ந்த மனிதனே என்ற பதில்தான்.விஞ்ஞானத்திற்கு எண்ணங்களே தோற்றுவாயாக இருக்கின்றன. எண்ணங்கள் சிந்தனைக்கு அத்திவாரம் இடுகின்றன. தொடர்சசியான சிந்தனை புதிய விஞ்ஞானக் கருவிகளை,தொழில்நுட்பக் கருவிகளைக் கண்டுபிடிக்க காரணமாகின்றன.

தற்செயலாக நடக்கும் சம்பவங்களே பெரும்பாலான விஞ்ஞானக் கருவிகளைக் கண்டுபிடிக்க அடிகோலியிருக்கின்றன.எந்தவொரு விஞ்ஞானக் கண்டுபிடிப்பும் தனியொருவரின் சிந்தனையால் கண்டுபிடிக்கப்படவில்லை.பலரின் சிந்தனைகளின் நீட்சியே விஞ்ஞானக் கண்டுபிடிப்பகளாகும்.

அப்பிள் மரத்திலிருந்து விழுந்த அப்பிள் பழம் மேல் நோக்கிப் போகாமல் கீழ்நோக்கி நிலத்திலே ஏன் விழுந்தது என்ற ஐசாக் நியூட்டனின் தொடர் சிந்தனையே புவியீர்ப்பைக் கண்டுபிடிக்க ஏதுவாகியது.அவருக்கு முன்னர் பழமோ பொருளோ பூமிடியை நோக்கி விழுவதைக் கண்ட பலர் ஏன் விழுகிறது என்று அதைப் பற்றியே தொடராக சிந்தித்திருக்க மாட்டார்கள்.ஐசாக் நியூட்டன் ஏன் கேள்வியைக் கேட்டு விடையைக் கண்டு பிடித்தார்.

ஜோர்ஜ் ஸ்ரீபென்சன் என்ற இளைஞன் அடுபபடிக்குள் இருந்து உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, தாயார் தண்ணீரைக் கொதிக்க வைத்த கேத்தல் மூடியை கொதித்த நீரின் ஆவி உந்தித் தள்ளியதைக் கண்ட அந்த இளைஞன் எது உந்தித் தள்ளுகிறது ஏன் உந்தித் தள்ளுகின்றது என்று தொடராகச் சிந்திக்கத் தொடங்கியதால்தான் நீராவிக்கு உந்தித் தள்ளும் வலு உண்டென்பதைக் கண்டு நீராவி இயந்திரத்தை கண்டு பிடித்தமையே புகைவண்டியின் தோற்றுவாயாகும்.

இத்தனை விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்கும் முன்னோடியானவன் மானிட வரலாற்றின் முதல் படியிலிருக்கும் காட்டு மனிதனே என்றால் அதை மறுக்க முடியாது.





காட்டு மனிதனின் முதல் ஆயுதமே கற்கள்தான்.ஒரு கல்லால் இன்னொரு கல்லை உடைத்தும் உரசியும் மிருகங்களைத் தாக்குவதற்காக ஆயுதம் செய்த போது உரசிய கல்லிருந்து பறந்த தீப்பொறிகள் அருகிலிருந்து சருகுகளில் பட்டு தீ எரியத் தொடங்கியது.முதலில் தீயைக் கண்டு அஞ்சிய மனிதன் அது என்னவாக இருக்கும் என்று மெது மெதுவாக அருகில் செனறான்,தீ எனறால் அதன் தன்மை எதுவென்று அறியாத அவன் தீயைத் தொட்டுப் பார்க்கையில் தீயினால் அவன் உடலில் வலியும் காயமும் ஏற்பட தீயின் தன்மையை உணர்ந்தான்.

தற்செயலாக தீயினால் சுடப்பட்டு வெந்த இறைச்சியைச் சாப்பிட்ட போது அதன் சுவை பச்சை இறைச்சியைவிட வேறாக சுவையாக இருப்பதைக் கண்ட காட்டு மனிதன் இறைச்சிகளை காய்கறிகளை தீயிட்டு சாப்பிடத் தொடங்கினான்.ஒவ்வொரு சிந்தனையின் முடிவிலும் இன்னொரு அரிய சிந்தனை பிறக்கும்.

ஐசாக் நியூட்டனையும், ஜோர்ஜ் ஸ்ரீபென்சனையும் தற்செயலாக நடந்த சம்பவங்கள் அவர்களின் உற்று நோக்குதலால் அர்களை விஞ்ஞானிகளாக்கியது.

காட்டு மனிதனின் வாழ்வியல் சூழ்நிலை அவனைச் சிந்திக்க வைத்தது.காற்றையும் தீயையும் மழையையும் கண்டு அஞ்சி நடுங்கிய அவன் நாளடைவில் அவற்றுக்கு பழக்கப்பட்டவனாக,அவற்றை தனது வாழ்வுக்கு உகந்ததாக மாற்றினான்.தீயைக் கண்டு அஞ்சிய மனிதன், தீயைக் கண்டு ஓடிய ஐந்தறிவு படைத்த விலங்கினங்கள் ஏன் ஓடுகின்றன என தற்செயலாக கண்டறிந்ததனால் விலங்குகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள தீ மூட்டி அதனை அரணாகப் பாவித்துத் தன்னைத் தற்காத்துக் கொண்டான்.

மானிட வரலாறு காட்டு மனிதனிலிருந்துதான் அரம்பித்தது என்ற மானிட வரலாற்று ஆய்வாளர்களின் கூற்றுப்படி பார்த்தால், காட்டு மனிதனிலிருந்துதான் விஞ்ஞானிகள் தோன்றினார்கள் என்றால் மறுப்பதற்கில்லை.

எமது அறிதலுக்கும் அனுபவத்திற்கும் உட்பட்ட பல சமகால நிகழ்வுகளை உற்றுநோக்கின், ஒவ்வொரு சமகால மனிதர்களின் சிந்தனை போல அதற்கடுத்த சமகால மனிதர்களின் சிந்தனை இருப்பதில்லை. வெறும் காடுகளாகவும் நிலம் பாறைகளாகவும் ஆறு குளம் கடல்களாகவும் இருந்த இந்தப் பூமி மானிட வர்க்கத்தினால்தான் இந்த வளர்ச்சியடைந்திருக்கின்றதெனில்,மானிட வர்க்கத்தின் வரலாறு எங்கிருந்து ஆரம்பித்ததோ அங்கிருந்தே அந்த மனிதர்களின் சிந்தனையே இன்றைய விஞ்ஞான நீட்சியாகும்.

எனவே தீயைக் கண்டுபிடித்து அதை தனதாக்கிய காட்டு மனிதனே முதல் விஞ்ஞானி என்பதை மறுக்க முடியாது.

விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் என்றால் அவை இன்று மானிட உலகம் அனுபவிக்கும் கணிணியுக டிஜிட்டல் உலக கண்டு பிடிப்புகள் மட்டுந்தான் என்று எண்ணுவது தவறு.மானிட வாழ்க்கையின் ஒவ்வொரு படிநிலையும் தொடர்ச்சியான சிந்தனைக் குட்பட்ட வளர்ச்சியே யாகும்.

துலாவும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புத்தான், ஓலையை வார்ந்து ஒன்றுடன் ஒன்று பின்னி இழைத்தால் பெட்டியாகும் கடகமாகும் என்பதும் விஞ்ஞானக் கண்டுபிடிப்பேயாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலையகத்தின் இன்றைய கல்வி நிலை

மாலினி மோகன்
(கொட்டகலை– இலங்கை)

மலையக பெருந்தோட்ட மக்கள் சமூகமே இலங்கை பொருளாதார அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பு நல்குகின்றது என்றால் அது மிகையல்ல. அதுபோல தற்போது கல்விதுறை விருத்திக்கும் மலையகம் தன் பங்கை சற்று பெருக்கிக்கொண்டுள்ளது என்றுதான் கூற வேண்டும். 1940 களில் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட முறையான இலவச கல்வித்திட்டத்துக்குள் மலையக தோட்டப்புற பாடசாலைகள் சுமார் 30 வருடங்கள் கடந்த பின்னே இணைய முடிந்தது. இருந்த போதும் கல்வித்துறையில் இன்னோரன்ன பல சாதனைகளை படைத்து தன் தடத்தை அழுத்தப்படுத்தி வருகின்றது. இத்தாமதமே மலையக கலவியின் வெற்றிக்கு வளர்ச்சிப்படிக்கட்டுக்கள்.

எம் மலையக பிள்ளைகளை சாதிக்க தூண்டும் திறவு கோல் அவர்களின் சிந்தனை தான். தன்னை சார்ந்தும் தன் சமூகம் சார்ந்தும் அவர்கள் சிந்திப்பதால் அடிமைகளான காலம் போய் இன்று பல துறைகளில் பற்பல பரிமாணங்கள் பெற்று மிளிர்கிறார்கள். இதற்கு கல்வியே, கல்வி தரும் அறிவே மூலக்காரணம். எனவே இலங்கை மலையக கல்வியின் வளர்ச்சிக்கு நீண்டகாலம் காத்திருக்க தேவையில்லை. அதற்கான அபிவிருத்தி நடவடிக்கைகளில் தட்டிக்கொடுத்தாலே போதும். வளங்களை பெற்றுக்கொடுத்தாலே போதும்.. கட்டிடம் இல்லாத, கதிரை, மேசை இல்லாத , போதியளவு ஆசிரியர்கள் இல்லாத எத்தனையோ பாடசாலைகள் எம் மலையகத்தில் இன்னும் இருக்கத்தான் செய்கின்றன. என்றாலும் அவர்கள் சாதிக்க தவறுவதில்லை. இச்சாதனைகளை இரட்டிப்பாக்க மலையகத்தை, மலையக பாடசாலைகளை செழிப்பாக்குங்கள் போதும். நாளை தலைநிமிரும் எம் மலையக சமூகம்.

ஒரு சமூகத்தின் நிலைமாற்றத்தில் அல்லது சமூக நகர்வில் கல்வி



கற்றோர்கள் குறிப்பாக பட்டாதாரிகள் எண்ணிக்கை மிக முக்கியம் ஆகிறது. மலையகத்தை அடையாளப்படுத்தும் பல பட்டதாரிகள் வைத்தியதுறை, சட்டத்துறை, பொறியியல் துறை, வணிகதுறை கணக்கியல் துறை என தமது தடத்தை பதித்துள்ளனர். மேலும் மிகச்சிறந்த எழுத்தாளர்களும் எமது சமூகத்தை முன்னேற்றும் வகையில் உருவாகியுள்ளனர். அந்தவகையில் பாடசாலை தவிர மாணவர்கள் வெளிவாரியாகவும் தனது கல்வியை தொடர்ந்து பட்டங்களை பெற்று மலையக கல்வியை இன்னும் வளர்ச்சி கட்டத்தில் வைக்கின்றனர். உதாரணமாக ONLINE கற்கைகள் , வெளிவாரி கற்கை நெறிகள், NVQ டிப்ளோமா, போன்ற பல.

தற்போது மலையக சூழலில் கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதோடு துறை சார்ந்த சாதனைகள் தலைதூக்குகின்றன. உதாரணமாக மலையகத்தை பிறப்பிடமாக கொண்ட தர்ஜினி சிவலிங்கம். இவர் இலங்கையின் தேசிய வலைப்பந்தாட்ட அணியின் நம்பிக்கை நட்சத்திரமாய் ஜொலிக்கும் மலையகப் பெண். இவர் வேர்ல்ட் போஸ்ட் சூட்டர் அவர்ட் பெற்ற பெண்மணி. மேலும் லபுக்கலை பெரட்டாசி தோட்டத்தை சேர்ந்த சின்னக்கருப்பன் பவானிஸ்ரீ என்ற சிங்கப்பெண் அண்மையில் நடந்து முடிந்த தெற்காசிய மெய்வல்லுனர் விளையாட்டு போட்டியில் கத்திச்சண்டை போட்டியில் வெற்றிபெற்றார். இவ்வுலகத்தில் நம் மலையகத்தின் சொத்து சுழற்பந்து வீச்சாளர் ,முத்தையா முரளிதரனை தெரியாதோர் யாருமுண்டா?.. இதுவே மலைகத்தின் வளர்ச்சிக்கு சான்றல்ல



வா.மேலும் நுவரெலியா பிரதேசத்தின் லபுக்கலை கொண்டகலை தோட்டத்தை பிறப்பிடமாக கொண்ட மாதவன் ராஜ்குமாரன் தெற்காசியாவை வென்ற கட்டழகராக திகழ்கிறார்.

மேலும் தமிழ் எழுத்து துறையில் இளைப்பாறிய மல்லிகைப்பூ சந்தி திலகர் ஐயா, அண்மையில் காலமான மல்லிகை சி குமார் , அமரர் சாரல் நாடன் ஐயா ,குறிஞ்சி தென்னவன் ஐயா, சிவனு மனோகரன் ஐயா, சி.வி.வேலுப்பிள்ளை ஐயா, போன்றோரும் இன்னும் தனது பணியில் சிறந்து விளங்கும் மலையகத்தின் மைந்தன் மொழிவரதன் ஐயா, வாழ்நாள் சாதனையாளர் விருது வென்ற தெளிவத்தை ஜோசப் ஐயா [இவர் ஊவாவை பிறப்பிடமாக கொண்டாலும் மலையகம் பற்றியே அதிகம் பேசியவர்]. மேலும் சு. முரளிதரன் ஐயா, லெனின் மதிவாணன் ஐயா, ஆர். சிவலிங்கம் ஐயா என பெருந்தகைகள் பலரும் தடம் பதித்துள்ளனர்.

1965 ஆம் ஆண்டுதான் மலையக மாணவர்களுக்கு பல்கலைக்கழக வாய்ப்பு கிட்டியது என மலையக வரலாறு பேசும். இவ்வாண்டுதான் மலையகத்திலிருந்து நேரடியாக பல்கலைக் கழகத்துக்கு 8 பேர் தெரிவாகினர். அதிலிருந்து தொடர்ந்து வந்த ஆண்டுகளின் மலையக மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி வெறும் 1 மூ சதவீதமாகும். படிப்படியான முன்னேற்றம் கண்டு இன்று சுமார் 10 மூவீதத்துக்கு மேல் மலையக மாணவர்கள் தெரிவாகுகின்றனர். இது எம் கல்வியின் வளர்ச்சி போக்கை காட்டுகிறது. 2017/2018 பல்கலைக்கழக அனுமதி மொத்தம் 31451 ஆக இருக்க இதில் எம்மலையக மாணவர்கள் 3232 இது மொத்தத்தில் 10.28 வீதமாகும். அதுபோல 2018/ 2019 இல் மலையக மாணவர்கள் அனுமதி 3247 ஆகும்.

எனவே கடந்த ஆண்டறிக்கைகளை ஆய்கையில் எமது மலையக கல்வி வெற்றி கண்டுள்ளதோடு தனக்கென ஓர் இடத்தை தக்கவைத்துள்ளமை அறியமுடிகின்றது.

2019 தரவுகளின்படி இலங்கையில் மலையக்கல்வி ஓர் தனி இடத்தை எட்டிப்பிடித்துள்ளமை கண்கூடு. கல்விக்கான குறைபாடுகள் நீக்கப்பட்டு நவீன வசதிகள் மலையகத்தின் வசமானால் காலப்போக்கில் கல்வியில் முதலாம் இடம் மலையகத்தை வாவென அழைப்பதும் சாத்தியமே.








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சந்திரவதனா
(யேர்மனி)




# "குதியைச் சரியாக் கழுவு மேனை கழுவாட்டில் சனியன் ஒட்டிக் கொண்டு வந்திடும்"

''சுத்தம் சுகம் தரும்...''

வாழ்வில் சில பழக்கவழக்கங்களை யாருக்காகவும் விட்டுக் கொடுத்து விட முடிவதில்லை. எனது இந்தப் பழக்கமும் அப்படித்தான்... ''சுத்தம் சுகம் தரும்''.

இது எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து ஒரு மந்திரம் போல அம்மாவின் வாயிலிருந்து ஒலித்துக் கொண்டேயிருந்தது. கூடவே பொய் சொல்லாதே. களவெடுக்காதே. பிச்சையெடுக்காதே என்றவைகளும் அவ்வப்போது மந்திரமாக ஒலித்தன.

இந்தச் சுத்த விடயத்தை மந்திர உச்சாடனத்துடன் மட்டும் நிறுத்திக் கொள்ளாமல், செயலிலும் அம்மா எப்போதும் கையாண்டு கொண்டே இருப்பா. கூட்டல், கழுவல், துடைத்தல் என்பன ஓயாது எங்கள் வீட்டில் நடந்து கொண்டேயிருக்கும். அண்டை அயலிலுள்ளவர்கள் (எல்லோரும் சொந்தக்காரர்கள்தான்) அவ்வப்போது இதையிட்டு ''சுந்தரி, நீ இப்பிடி காலநேரம் பாராமல் கூட்டிக் கூட்டிக் கொண்டேயிருக்கிறது நல்லதில்லை. வீட்டிலையுள்ள செல்வமெல்லாம் அப்படியே போயிடும்'' என்று அம்மாவை எச்சரிப்பார்கள். அதையெல்லாம் அம்மா காதுகளில் வாங்கிக் கொள்வதேயில்லை. வீட்டில் ஒரு தூசியோ, துரும்போ இருக்கக் கூடாது என்பது அவ தனக்குள் வகுத்துக் கொண்ட எழுதாத சட்டம்.

இந்த அதீத சுத்தப் பழக்கம் விரும்பியோ விரும்பாலோ அம்மாவிடமிருந்து பிள்ளைகள் எங்களுக்கும் தொற்றி விட்டது. இதன் காரணமோ என்னவோ தெரியாது சின்ன வயதிலேயே நான் எதற்கும் அரியண்டப்படுவேன். சின்ன ஊத்தையும் என்னைத் தொந்தரவு செய்யும். அடிக்கடி கை கால்களைக் கழுவிக் கொள்வேன்.

எனது இந்தக் கை, கால்களை அடிக்கடி கழுவும் பழக்கத்துக்கு எனது பெத்தம்மாவும் (அம்மம்மா) ஒரு காரணம். யார் வெளியில் போட்டு வீட்டுக்கு வந்தாலும் ஒவ்வொரு பொழுதிலும் எனது பெத்தம்மா மேனை, காலைக் கழுவிப் போட்டு வா மேனை என்பா. இதற்காகவே பெத்தம்மா வீட்டு முன்றலில் நிற்கும் ஒற்றைப்பனையின் கீழ் தண்ணீர் நிரம்பிய ஒரு வாளியும் ஒரு கிண்ணமும் வைக்கப்பட்டிருக்கும். வெளியில் போய் விட்டு வரும்போது, காலைக் கழுவாது வீட்டுக்குள் நுழைந்தால் சனியனும் சேர்ந்து வீட்டுக்குள் நுழைந்து விடும் என்பது பெத்தம்மாவின் வாதம். அதையும் சும்மா சாட்டுக்குத் தண்ணியை ஊற்றி விட்டு வர அனுமதிக்க மாட்டா. ''குதியைச் சரியாக் கழுவு மேனை. சரியாக் கழுவாட்டில் சனியன் குதியோடை ஒட்டிக் கொண்டு வந்திடும்'' என்பா. அதனால் இப்போது ஜேர்மனியிலும் கூட அடிக்கடி கால்களைக் கழுவிக் கொள்கிறேன். அத்தோடு பிரச்சனை முடிந்தால் பரவாயில்லை.

சாம்பல் போட்டு, தேங்காய்ப்பொச்சால் சட்டி பானை மினுக்குவதைத் தவிர்த்துக் கொள்வேன். தவிர்க்க முடியாமல்



கட்டாயம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் வந்தால் பழைய பொச்சைத் தொடவே மாட்டேன். புதிய பாவிக்காத பொச்சாகத் தேடி எடுத்துத்தான் மினுக்குவேன். அந்தப் பழைய பொச்சைத் தொட எனக்கு அவ்வளவு அருவருப்பு.

அதே பிரச்சனை இங்கு ஜேர்மனியிலும். சமையலறையில் கழுவுவதற்குப் பாவிக்கும் Sponge ஐத் தொடுவதற்கு எனக்கு விருப்பமில்லை. அடிக்கடி புதிதை மாற்றிக் கொள்வேன். ஆனாலும் அதில் கிருமிகள் இருக்கும் என்பது எனக்குத் தெரியும். அதனால் ஒவ்வொரு முறையும் அதைப் பாவித்த பின் கைகளை சோப் போட்டுக் கழுவிக் கொள்வேன். அது மட்டுமல்ல. வேறெதைத் தொட்டாலும் கைகளைக் கழுவுவேன். கணவருடன் சேர்ந்து சமைக்கும் பொழுதுகளில் அவருக்கு இது எரிச்சலை ஏற்படுத்துவதை அவதானிப்பேன். அதற்காக எனது கைகளைக் கழுவாமல் என்னால் சமையலைத் தொடர முடிவதில்லை.

கிணற்றடியைச் சுற்றியிருக்கும் தண்ணீர்ப் பாத்திகள், வாய்க்கால்களில் சரக்கட்டைகளோ, அட்டைகளோ ஓடுவதைக் கண்டால் தாங்க முடியாத அருவருப்பு உணர்வு எனக்குள் தோன்றும். பாத்திகளைப் பாய்ந்து தாண்டியே செல்வேன்.

எப்போதும் செருப்புப் போட்டிருப்பேன். செருப்பில்லாமல் நடக்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் எனக்கு மிகக் கடினமானவையாகவே இருக்கும். அதற்கு எனது அப்பாவும் ஒரு காரணமாக இருக்கலாம். அப்பா ''உள்ளங்கால்களினூடும் உள்ளங்கைகளினூடுந்தான் அதீதமாகக் கிருமிகள் உடலுக்குள் போகின்றன. அதனால் எப்போதும் செருப்புப் போட்டிருப்பது நல்லது'' என்றும் ''மலசலகூடங்களின் பிடிகளில் கண்டிப்பாக கிருமிகள் இருக்கும். அதனால் எப்போதும் மலசலகூடத்துக்குப் போய் விட்டு வந்தால் கைகளை சோப் போட்டுக் கழுவ வேண்டும்'' என்றும் சொல்வார்.

மிகச் சின்ன வயதிலேயே எனது மூளையில் பதிந்து போன இந்த விடயங்கள் எப்போதும் எனக்குள் ஒரு வித எச்சரிக்கை உணர்வைத் தந்து கொண்டேயிருப்பதால் நான் செருப்பின்றி வெறுங்கால்களுடன் நடப்பதில்லை.

இந்தச் செருப்பு விடயம் சில சமயங்களில் எனக்குப் பெரும் பிரச்சனைகளைக் கூடத் தந்திருக்கின்றன. நான் வீட்டுக்கென எப்போதும் பிரத்தியேகமான செருப்புகளை வைத்திருந்தாலும் செருப்புடன் வீட்டுக்குள் நடந்தால் வீடு அசுத்தமாகி விடும் என்பது போல என் மேல் அவ்வப்போது சிலர் கோபப்பட்டிருக்கிறார்கள். வெறுங்கால்களுடன் ஊத்தை இடங்களில் நடந்து விட்டு, கால்களைக் கழுவாமல் வீட்டுக்குள் திரிபவர்கள் கூட எனது சுத்தமான செருப்பால் வீடு அழுக்காகிறது என்று முகத்தைச் சுழித்திருக்கிறார்கள். ''இவ என்ன லண்டனிலை பிறந்தவவோ?'' பரிசிலை பிறந்தவவோ? என்று கூட கோபம் கலந்த நையாண்டியுடன் என்னைப் போகவிட்டுச் சிலர் கதைத்திருக்கிறார்கள். எனது புகுந்தவீட்டில் கூட இது எனக்குச் சங்கடங்களை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனாலும், எதற்காகவும் யாருக்காகவும் என்னால் தவிர்க்க முடியாத ஒன்று செருப்புப் போடுவது. இப்போது, இங்கே ஜேர்மனியிலும் பலர் வீடுகளுக்குள் செருப்புப் போடுவதில்லை. அதனால் எங்கு போவதாயினும் ஒரு சோடி சுத்தமான செருப்பை அதாவது வீட்டுக்குள் மட்டும் போடும் செருப்பைக் கொண்டே செல்கிறேன்.

அதே போல மலசலகூடங்களின் பிடிகளில் கண்டிப்பாகக் கிருமிகள் இருக்கும். அதனால் எப்போதும் ''மலசலகூடத்துக்குப் போய்

28 ஆம் பக்கம் பார்க்க...






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஜெனீவா களம் இம்முறை யாருக்கு சாதகமாக அமையப்போகின்றது?

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

இல்லாத நிலையில், அதனை நிறைவேற்றச் செய்வதற்கான பொறிமுறை எதுவும் ஜெனீவாவிடம் இல்லை. அதனை இலங்கை தனக்கான வாய்ப்பாகவே இதுவரையில் பயன்படுத்திவந்திருக்கின்றது. வெறுமனே ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குள் இருந்து கொண்டு எதனையும் சாதிக்க முடியாது என்ற கருத்து வலுவடைவதற்கு இது தான் காரணம்.

இலங்கை அரசாங்கம் இணை அனுசரணை வழங்கினாலும், அதனை நிறைவேற்ற ஒருபோதும் ஒத்துழைக்கப்போவதில்லை என்பது கடந்த வருடங்களில் உணர்த்தப்பட்டுவிட்டது. அதனால்தான் 'பிரச்சினையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும்' என்ற கருத்து வலுவடைந்து வந்தது. அதனை இதுவரையில் ஏற்றுக் கொள்ளாமலிருந்த கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.சு.சுமந்திரனும் அதனை இப்போது ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியிருக்கின்றார்.

இந்த நிலையில், தமிழ்த் தரப்பினரால் தற்போது முன்வைக்கப்பட்டிருக்கும் கோரிக்கை, பேரவையின் உறுப்பு நாடுகளால் புறக்கணித்துவிடக்கூடிய ஒன்றாக இருக்கப்போவதில்லை. புதிய தீர்மானம் ஒன்றைக் கொண்டுவருவதற்காக திட்டமிடும் பிரதான நாடுகள் இந்தக் கோரிக்கையிலுள்ள அம்சங்களை உள்வாங்க வேண்டிய அழுத்தங்களுக்கு உள்ளாவார்கள் என எதிர்பார்க்கலாம். பிரதான 3 தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கையொப்பமிட்டிருப்பதால், இந்தக் கோரிக்கை வலுவானதாகவே இருக்கும்.

தமிழ்க் கட்சிகளால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளில் 4 முக்கிய விடயங்கள் உள்ளடங்குகின்றன.



01. இலங்கையை இனப்படுகொலை, மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள், யுத்த குற்றங்கள் உள்ளிட்ட குற்றங்களை விசாரிப்பதற்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கும் வேறு பொருத்தமானதும் செயற்படுத்தக்கூடியதுமான சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறைகளுக்கும் பாரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஐ. நா. பொதுச்சபை, ஐ. நா. பாதுகாப்புச்சபை போன்றவை எடுக்க வேண்டுமென்று இப்புதிய தீர்மானத்தில் உறுப்பு நாடுகள் வலியுறுத்த வேண்டும்.

02. ஐ. நா.மனித உரிமைப் பேரவையின் தலைவர் இவ்விடயத்தை மேல் கூறப்பட்டபடி நடவடிக்கைக்காக மீளவும்செயலாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

03. ஐ. நா. மனித உரிமை உயர் ஸ்தானிகரின் அலுவலகம் இலங்கையில் தொடர்ந்து நடைபெறுகிற மீறுதல்களை கண்காணிக்கவும் இலங்கையில் அவ்வலுவலகமொன்றை ஸ்தாபித்தல் வேண்டும்.

04. மேலே 01 இல் கூறியதற்கு பங்கமில்லாமல் ஐ. நா. பொதுச் சபையின் உப பிரிவாக, சீரியா சம்பந்தமாக உருவாக்கப்பட்ட சாட்சிகளை சேகரிக்கிற பொறிமுறை போன்றதொன்றை [IIIM] கடுமையான 12 மாத அவகாச நிபந்தனையோடு ஏற்படுத்துதல்.

தமிழ் அரசியல் அரங்கில் பிரதான மூன்று கட்சிகள் இணைந்து ஜெனீவாவை நோக்கி இவ்வாறான கோரிக்கை மனு ஒன்றை முன்வைத்திருப்பது முக்கியமான ஒரு முன்னேற்றம்தான். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குப் பிரச்சினையைக் கொண்டு செல்ல வேண்டும் என்ற கோரிக்கை எந்தளவுக்கு ஏற்கப்படும் என்பதும், அதற்கான நடைமுறைச்சாத்தியங்கள் எந்தளவுக்கு இருக்கின்றன என்பதும் ஆராயப்பட வேண்டியவைதான்.

எப்படியிருந்தாலும், மனித உரிமைகள் பேரவையில் தமிழத் தரப்பினர் நம்பிக்கையிழந்துவிட்டார்கள் என்பதை இது சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தியிருப்பதுடன், அடுத்த கட்டத்தை நோக்கிச் செல்ல வேண்டிய தேவை இருப்பதையும் உறுதியாகச் சொல்லியிருக்கின்றது. தமிழ்க் கட்சிகளின் இந்தக் கோரிக்கை மனு பேரவையின் உறுப்பு நாடுகள் மத்தியில் எந்தளவுக்குச் செலுத்தப்போகின்றது? ஜெனீவாவில் வரப்போகும் பிரேரணையில் அந்தக் கோரிக்கையின் அம்சங்கள் உள்வாங்கப்படுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்!

## "குதியைச் சரியாக் கழுவு மேனை கழுவாட்டில் சனியன் ஒட்டிக் கொண்டு வந்திடும்"

27 ஆம் பக்கத் தொடர்ச்சி...

விட்டு வந்தால் கைகளை சோப் போட்டுக் கழுவ வேண்டும்'' என்று அப்பா சொன்னதை நான் மறப்பதேயில்லை. இந்தக் கொரோனாப் பிரச்சனைக்கு முன்னமே என்னதான் உயிர் போகும் பிரச்சனையென்றாலும் மலசலகூடக் கதவுப் பிடிகள், மலசலகூடப் பொத்தான்கள் எதைத் தொட வேண்டிய தேவைகள் வந்தாலும் கைகளை சோப் போட்டுக் கழுவி விடுவேன். யாருக்குக் கை கொடுக்க வேண்டிய தேவை வந்தாலும் கொடுத்த பின் அவர்களுக்குத் தெரியாமல் எப்படியாவது கைகளைக் கழுவி விடுவேன்.

இப்படி எனது சுத்த விடயம் பற்றி தினமும் 2-3 தடவைகள் குளிப்பதிலிருந்து இன்னும் நிறையவே சொல்லிக் கொண்டு போகலாம். இதனால் ''நானே ஒரு பிரச்சனை'' என்பது போல என்னைப் பார்த்தவர்கள், கேலி பண்ணியவர்கள் எல்லாம் இப்போது கோரோனாப் பயத்தில் என்னைப் போல இல்லாவிட்டாலும் அடிக்கடி கைகளைக் கழுவுகிறார்கள்.

## சுவாமி விவேகானந்த சரிதம்

13 ஆம் பக்கத் தொடர்ச்சி...

2. பார்வையாளர்களில் பலரும் ராமகிருஷ்ண மிஷன் பக்தர்களாக அமைந்ததால் , கண்ணீர் மல்க வெண்ணுள்ள வாழ்த்துகளை வழங்கி மகிழ்ந்தனர். அப்பொழுது பிராதன ஸ்வாமிஜி என்னருகே வந்தார் .சந்தித்த முதல் நாள் அவர் கொண்ட உச்ச வியப்பிற்கான காரணத்தை தெரிவித்தார்.நாம் தினம் போற்றும் மகானின் வாழ்க்கை சரிதத்தை வயதிலும் மிகவும் குறைந்த ஒருவரிடம் கை அளிக்கிறோமே, இலங்கையில் மூத்த நடன ஆசிரியர் ஒருவர் என்னை சந்திக்க வருவார் என்று காத்திருக்கும் போது ஒரு சிறு பிள்ளை வந்து நிற்கிறதே என்பதே என் பயமும் வியப்பும் , ஆனால் இன்று உங்கள் கீர்த்தி எத்தனை பெரிது என்று நிரூபித்தீர்கள் . இராமகிருஷ்ண மிஷன் என்றுமே உங்களை போற்றும் என வாழ்த்துக்களை அள்ளி வழங்கினார்.இதுஅபிநயக்ஷேத்ராவின் கன்னிப் படைப்பிற்கு கிடைத்த பேராதரவு என்று ஏற்றுக்கொண்டோம். அதுவே ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து பல நாட்டிய நாடகங்களை உருவாக்க உரமானது பொங்கும் விரிக்கடல் போன்ற சரிதம் உண்மை ஒன்றே வலிமை தர முடியும் என்று உரைத்த சரிதம் இந்து தர்மத்தை உலகம் உணர்ந்திட செம்மை செய்திட்ட உயரிய சரிதம் வெற்றி வேண்டும் எனில் தீவிர சங்கல்பம் வேண்டும் என்று உணர்த்திய சரிதம் , சுவாமி விவேகானந்த சரிதம்.

இதனை , குருவின் அருளால் நாட்டிய படைப்பாகிட்ட சந்தர்ப்பம் அமைந்தது அம் மகானின் அருள் அன்றி பிறிதில்லை.

## உன்னையும், என்னையும் பேற்றது காதல்

21 ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஆடவன் மேலும், மயக்கும் மங்கை மேலும் வைக்கக் கூடிய காதலை இன்னும் ஆழமாக ஆண்டவன் மேலே வைத்து விடுகின்றனர். அதாவது மானிடரிடையே காணப்படும் உலக இன்பங்களை நிரந்தரமாக பிடித்து வைக்க முடியாது ஆகையால் அவற்றை 'சிற்றின்பம்' என்றும், அதை இறை நிலையில் பிடித்து வைத்தல் சாத்தியமாகையால் அதனை 'பேரின்பம்' என்றும் அழைக்கின்றனர். ஆனால் மானிடரிடையேயான காதல் பற்பல மாயையில் சிக்க வைக்கும் என்றாலும் மேற்குறிப்பிட்ட காத்திருப்பு, கரைதல், தன் அகப்பார்வை, நுண்ணறிவு, இறுக்கமற்ற மனது, ஒரு விடயத்தில் மனம் ஒன்று குவிதல், தியாகம், வைராக்கியம் போன்ற நற்பண்புகளின் அறிமுகத்தை வழங்குகிறது. காதல் கற்பிக்கும் நல் விடயங்கள் ஏராளம். எனினும் இறைநிலையை அடையும் நோக்கமுடையவர்கள் இந்த சிறு விடயங்களில் தேங்கிவிடுவதில்லை. நிரந்தரமான விடயங்களிலேயே கவனத்தை செலுத்துகின்றனர்.

உண்மையில் பேரின்ப ஜோதியில் கரைந்து விட சிற்றின்பங்களை துறந்து தன்னையே உருக்கிக் கொண்டு நீண்ட காலம் காத்திருக்கும் யோகியர் கூட மிக ஆழமான காதலர்கள் எனலாம்.








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# திரைக் கலைஞர் பாலு மகேந்திரா பெயரில் கிளிநோச்சியில் ஓர் நூலகமும் பயிற்சிக் கூடமும்




**பாலு மகேந்திராவுடனான சில அனுபவங்களைப் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் பகிர்ந்துகொள்கிறார்.**

ரம்மியா ஹம்சிகா எனும் இரு இளம் ஊடகவியாலாளினிகள் கிளிநொச்சியிலிருந்து என்னுடன் ஒரு நாள் தொலைபேசியில் தொடர்பு கொண்டனர். ஓர் அழைப்பும் விடுத்தனர்

நாங்கள் சிலர் இணைந்து பாலுமகேந்திரா பெயரில் ஓர் நூல் நிலையமும் பயிற்சிக் கூடமும் ஆரம்பிக்கிறோம். 27.12.2020 இல் அதன் ஆரம்ப விழா நடைபெறவுள்ளது அதில் ஓர் சிறப்பு விருந்தினராக நீங்கள் கலந்து கொள்ள வேண்டும். அதில் பாலுமகேந்திராவுடனான உங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவேண்டும் சரி என ஒப்புக்கொண்டேன்.

பாலு மகேந்திரா என் ஊரவர். எனது வீட்டுக்கும் அவர் வீட்டுக்கும் 300 அல்லது 400 யார் தூரம்தான் இடைவெளி, அவர் என்னை விட 4 வயது மூத்தவர் அவரை நாம் மகேந்திரன் அண்ணன் எனவே அழைப்போம்.

எனது 10 வயதிலிருந்து 15 வருடங்கள் தொடர்ச்சியாக அவருடனான நெருக்க உறவு இருந்தது. அவர் தந்தையார் பாலநாதன் புகழ் பெற்ற கணித ஆசிரியர்.

தந்தையின் பெயரைத் தன்னுடன் இணைத்து பாலு மகேந்திரா என்பெயர் வைத்துகொண்டார் மகேந்திரன்.

பின்னாளில் இந்த பாலுமகேந்திரா எனும் பெயரே நிலைத்து விட்டது.

அவரது உறவினர்கள் இன்றும் என் அருகில் வசிக்கிறார்கள். மகேந்திரன் அண்ணா என்றே சிறு வயதில் அவரை நான் அழைப்பேன். அடிக்கடி மகேந்திர அண்ணர் வீடு செல்வேன். அனைத்தையும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் மிக்க வயது அது. அவர் தனது தோற்றத்தாலும், பேச்சாலும், செயற்பாடுகளாலும் எம்மை மிகவும் கவர்ந்தார்.

தரமான கலை இலக்கிய ஈடுபாடு கொண்டவர் அவர். அவர் சிந்தனைகள் எம்மீதும் தாக்கம் செலுத்தின அவரோடு உரையாடிய நாட்கள், அவரது கலைத் துறை ஆசைகள் அவரது கலைப் பெரு வெறி கலைத்துறையில் சாதிக்க வேண்டும் என்ற அவரது அதீத வெறிக் குணம் எமது சிறு வயதில் அந்த வெறியினை எமக்கும் ஊட்டியமை , அவர் இளவயது மனப்போக்கு,அவரது குசும்புத்தனம், அவரது ஊர் அனுபவங்கள்,அனைத்தையும் சிறுவனாகவும் வாலிபனாகவும் அருகிலிருந்து பார்த்த அந்த ஞாபகங்கள் வந்தன.

இளசுகள் ஆகிய இந்த இளம் தலை முறையினர் ஆர்வம் காரணமாக ஒரு சிறு வீட்டில் ஓர் நூல் நிலையம் ஆரம்பிக்கிறார்கள் என எண்ணிய ஒப்புதல் தந்த எனக்கு அக்கலையகம் பற்றி அதன் தலைவர் ரம்மியா காட்சிகளுடன் நடத்திய அழகான அறிமுக உரையும் அதனூடாக வெளிப்பட்ட அக்கலையகத்தின் அமைப்பும் அங்கிருக்கும் நூல்கள் வீடிஓக்கள் பற்றிய தகவல்களும் பெரு வியப்பையும் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் அளித்தன. 27.12.2020 இந் நூலகத் திறப்பு விழா நடந்தேறியது .பலர் இணையம் மூலம் இணைந்து கொண்டனர். உலகப்பிரசித்தி பெற்ற ஈரானிய திரைப்பட இயக்குனராகிய மஜீத் மஜீதி அவர்கள் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டார். கனடா, ஐக்கியராச்சியம்,இந்தியா, இலங்கை இருந்து பலர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

அந்நூல் நிலையத்தில் 10,000 க்கு மேற்பட்ட திரைப்பட இறுவட்டுகளும் , பாலேந்திரா சேகரிப்பில் இருந்து அவர்கள் குடும்பத்தினர் கொடுத்த 2000 இறுவட்டுகளுமாக ,மொத்தம் 12000 க்கு மேற்பட்ட இறுவட்டுகள் இருக்கின்றன என அறிகிறேன் .

அத்தோடு பாலுமகேந்திரா குடும்பம் அளித்த அவர் வீட்டில் இருந்த 750 சினிமா சம்பந்தமான நூல்களும் ஈழத்து எழுத்தாளர்களின் 700க்கு மேற்பட்ட நூல்களும் அங்கு இருக்கின்றன என ரம்மியா கூறினார்.

இப்படி அதிகளவு இறுவட்டுகள் கொண்ட நூல் நிலையம் இலங்கையில் எங்கும் இல்லையென நினைக் கிறேன்.

ஈழத் திரைப்படத்துறையை மேம்படுத்தும் நோக்குடன் இலாப நோக்கமற்றுச் செயலாற்றும் சுயாதீனக் கட்டமைப்பு ‘பாலு மகேந்திரா நூலகம்’ ஆகும்.

அவர்கள் செயல் திட்டங்கள் அவர்களின், அதீத ஆசையை பெரும் கனவுகளைக் காட்டின. பல வகைகளில் இது எனக்கு ஓர் முக்கிய செயற்பாடக முன்னெடுப்பாக எனக்குப் பட்டது.

**அவையாவன:**

1. மட்டக்களப்பிலே ஒரு சிறு கிராமத்தில் பிறந்த பாலு மகேந்திராவுக்கு, வன்னியில் கிளிநொச்சி எனும் கிராம நகரத்தில்

30 ஆம் பக்கம் பார்க்க...









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

29 ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஓர் நினைவாலயமும் நூல் நிலையமும் அமைக்கப்படுவது, முக்கியமாக இக்காலகட்டச் சூழலில் வரவேற்கப்பட வேண்டிய மிகவும் ஓர் முக்கிய அம்சம்.

2. இதனை ஒழுங்கு செய்பவர்கள் பல்கலைக்கழகத்தில் ஊடக வியல். திரைப்பட அறிமுகம் பயின்று வெளியேறிவர்கள் அதிலும் மிகவும் இளம் தலை முறையினர் அதிலும் முக்கியமாகப் பெண்கள்

3. இந்த ஆரம்பவிழாவுக்கு அவர்கள் ஈரானிய திரைப்பட நெறியாளர் மஜீத் மஜீதி , சிங்கள திரைப்பட நெறியாளர் பிரசன்ன விதான, தமிழ் திரைப்பட பட நெறியாளர் பாரதிராஜா போன்றோரையும்

4. உள்நாட்டின் திரைப்படத் துறையில் ஈடுபடும் ஞானதாஸ், சோமீதரன் விரிவுரையாளாா் கலாநிதி ரகுராம் போன்றோரையும்

அப்துல் ஹமீட், தாஸீசியஸ், தம்பிஜயா தேவதாஸ் போன்றோரையும் இன்னும் சிலரையும் சிறப்பு விருந்தினர்களாக அழைத்தும் இருந்தனர். இது அவர்களின் இன மொழி நாடு கடந்த மிகப் பரந்த மனப்பான்மைக்கு அடையாளம்.

5. நேற்று இணைய கருத்தரங்கில் இணைய வந்திருந்தோரிடையே 80 வயதை அண்மிக்கும் முது வயதுக் கலைஞர்களும், 50 வயதினரான நடுவயதுக் கலைஞர்களும் 20 வயதினரான இளவயதுக் கலைஞர்களும் காணப்பட்டனர். இந்த தலைமுறை சங்கமம் இக்காலகட்டத்தில் மிக மிக முக்கியமானது. முது வயதினரிடமிருந்தும் நடு வயதினரிடமிருந்தும் அனுபவங்களை பகிர்ந்து கொண்டு இதனை ஒழுங்கு செய்த இளம் தலைமுறையினர் மேலே பயணம் செய்ய ஆயத்தமாக இருந்தனர் என்பதனை இக் காலசங்கமம் காட்டியது. இவையாவற்றையும் கூறி பாலு மகேந்திராவின் இளவயது அனுபவங்களும், பாலிய வயது அனுபவங்களும் எவ்வாறு அவர் படங்களில் வெளிப்பட்டது என ஓரிரு உதரணம் காட்டினேன்.

## வீடு

கலைஞனை என்றும் இயக்குவது அவனது இந்த ஆழ்மன அனுபவங்களே! பாலு மகேந்திராவின் தந்தையார் பாலநாதன் ஓர் கல் வீடு கட்ட எடுத்த சிரமம் துயரம் துன்பம் அலைச்சல் என்பன இளம் பாலு மகேந்திராவின் அடி மனதில் ஆழப்பதிந்த ஒன்று, அந்த ஆழ்மன அனுபவமே அவரது வீடு திரைப்படமானது. எமது இருவரின் ஊரான அமிர்தகளி அங்கிருக்கும் மாமாங்கப் பிள்ளையார் ஆலயம் அதனது குளம் என்பன பிரசித்தமானவை. அந்த மாமாங்கபிள்ளையார் மாமாங்கக் குளத்தில் ஒருவர் மூழ்கி இறந்து விட்டார்,,அவரது உடல் வெளியே கிடத்தப்பட்டு இருந்தது .அதனை பார்க்க ஊரே கூடியது மகேந்திர அண்ணரும் அதனை காண ஓடோடி வந்தார் அந்த உடலும் சூழலும் ஊரின் அழுகையும் அவர் மனதில் ஏற்படுத்திய பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. அவ்வுடலை அவரும் நானும் சென்று அருகே இருந்து பார்த்தோம் அந்த சோகம் எம்மைக் கௌவியது.

## அழியாத கோலம்

‘‘எத்தனை கனவுகளுடன் இவர் இருந்திருப்பார் என அவர் கவலையுடன் கேட்டமையும் ஞாபகம் வருகிறது’’ அந்த அனுபவமும் மகேந்திர அண்ணரின் பாடசாலைப் பருவச் சேட்டைகளும் அழியாத கோலம் எனும் திரைப்படத்தில் அழகாக வெளிப்பட்டது. அவரது இளம் வாழ்வில் அவரது வாலிப வாழ்வில் குறுக்கிட்ட பெண்கள் அதன் காரணமாக எழுந்த ஆண் பெண் உறவுகள் – முரண் பாடுகள் என்பன அவரது பல படங்களில் வெளிப்பட்டன. அவற்றை அவரது படங்களோடு இணைத்துப் பார்ப்பது அவரைப் புரிந்துகொள்ள உதவும். அவர் மிக மென்மையானவர், மெல்லுணர்வுகள் கொண்டவர் ,நேர்மையானவர், .தன்னை எப்போதும் விமர்சித்துகொண்டு வாழ்ந்தவர்.

## சந்தியா ராகம்

சந்தியா ராகத்தில் சொக்கலிங்க பாகவதரை வாகன நெருக்கடி சூழலில் நடக்கவைத்து வருத்தியதையும் அதனால் தன் மனம் மிக வருந்தியதையும் அவர் கூறியுள்ளார். தன்னையே விமர்சிக்கும் குணம் அது. அவர் ஓர் இலக்கிய ஆர்வலர், சிறுகதை ஆசிரியர், இலக்கியப்பத்திரிகை ஆசிரியர்,கவிஞர்,,திரைப்பட எழுத்தாளர் , படப்பிடிப்பாளார், சிறந்த வாசகர்.சிந்தனையாளர், என பல திறன்கள் கொண்டவர். இப்பல் திறன் ஆற்றலே அவரை அவர் துறையில் பலரும் வியக்கும் மனிதராக்கியது.

## இயற்கையை விட வேறு என்ன ஒளி இருக்கிறது

தனது வேகத்திற்கு இலங்கையில் இடம் இல்லை எனவும் திரைப்படத் துறையில் அதிகம் அறிய வேண்டும் எனவும் எண்ணிய அவர் இலங்கை விட்டகன்றார், வெளி நாட்டில்பட்டம் பெற்றார், பூனா திரைபடக் கல்லூரியில் முறையாக திரைப்படம் பயின்றார் அத் துறையில் தொழிநுட்பத் தேர்ச்சி பெற்ற பின்னரேயே அத் துறையில் இறங்கினார். இந்த திறமைகள், அர்ப்பணிப்பு ,தேடல், ஈடுபாடு அவரிடமிருந்து இன்று சினிமா செய்யப் புறப்படும் இளம்தலைமுறை கற்க வேண்டியவை. அவர் ஒரு ஒளிப்பதிவாளராக அறி முகமாகிய படம் ஒரு மலையாளப்படம் அதனை செய்தவர் செம்மீன் புகழ் ராமுகரியத். அவரின் நெல்லு எனும் படம் வெளி வந்தது 1972 ஆம் ஆண்டில் அப்போது பாலு மகேந்திராவுக்கு வயது 31. அவருக்கு தெலுங்கு சங்கராபரணம் பெரும் புகழ் தந்தது. அவர் முதல் ஒளிப்பதிவு செய்த முதல் தமிழ்ப் படம் முள்ளும் மலரும் . அதில் நாயகன் ரஜனிகாந்த் அதன் காட்சிகள் அனைவரையும் கவர்ந்தன, இயற்கை ஒளியையே அதில் அவர் அதிகம் பாவித்தார். இயற்கையை விட வேறு என்ன ஒளி இருக்கிறது என்பார் .இது வந்தது 1977 இல் அப்போது பாலு மகேந்திராவுக்கு வயது 38 அவரது அழியாத கோலங்கள் திரைப்படம் 1978 இல் வருகிறது. அப்போது பாலு மகேந்திராவுக்கு வயது 39 அவரது முதிர் சிந்தனைகளை பிரதிபலிக்கும் வீடு [ 1988] சந்தியா ராகம் [ 1990] போன்ற படங்கள் பின்னால் வருகின்றன.

தன் காலத்துக்குள் பல மாற்றங்களைக் கண்டவர் அவர் தமிழர் சமூக அமைப்பில் அரசியலில் போராட்டங்களில் பொருளாதாரம் மாறியதில் தொழில் நுட்ப முன்னேற்றத்தில் எல்லாம் தீவிர மாற்றங்களைக்கண்டார் அவற்றைப் புரிந்து கொண்டார் உள் வாங்கிக் கொண்டார். இவற்றையெல்லம் உள் வாங்கி வளர்ந்த அவர் கடைசியாக நடித்த படம், தலைமுறைகள்.

தாத்தா பேரன் உறவுக் கதை அது. அழியாத கோலங்களில் விடலை பெடியனாக உலகை பார்த்த அவர் தலைமுறைகளில் 70 வயது கடந்த தாத்தாவாக உலகைப்பார்க்கிறார்.

இப்பார்வைகளை அவருக்கு அவரது உலக அனுபவமும் நூல் வாசிப்பும்

31 ஆம் பக்கம் பார்க்க...





# திரைக் கலைஞர் பாலு மகேந்திரா பெயரில் கிளிநொச்சியில் ஓர் நூலகமும் பயிற்சிக் கூடமும்




# 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர்.செல்லையா பொன்னுதுரை (மகாத்மா ஜவுளி உரிமையாளர்)**

பிறந்த இடம்: கொக்குவில், வாழ்ந்த இடம்: நந்தாவில் அம்மன் கோவில் கொக்குவில் கிழக்கு மற்றும் கொழும்பு காலஞ்சென்ற ஞானேஸ்வரயின் ஆருயிர்க் கணவரும் தர்மபூபதி ஜேர்மனி, தர்மேந்திரன் (ஜேர்மனி) தர்மகுலசிங்கம் (கனடா), தர்ம இந்திரா (கனடா), தர்மகுலேந்திரன் (கோண்டாவில்), தர்ம சந்திரா (ஜேர்மனி), தர்மானந்தன் (ஜேர்மனி), தர்மராஜ் (கொக்குவில்) ஆகியோரின் பாசமிகுந்த தந்தையும் விவேகானந்தன், வரலக்சுமி, உமா, சுகந்தி, முருகநாதன், அஜந்தா ஆகியோரின் அன்பு மாமானாரும் டுசாந்தினி - ரமணன், அனித்தா, செந்தூரன், மஜிதா- அக்ஸே, மஜித்தன், மஜிதியா, தனுஜா, வினுஜா, சுபிஜா, ஜதூர்சன், அபினையா ஆகியோரின் அன்பு அப்பப்பாவும் ஜேர்மிளா, அருள்மிளா, கஜீபன், லீனா, லோஜினி ஆகியோரின் அன்பு அம்மப்பாவும் அகீன், ஜஸ்மீன், நிகிதா ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்: குடும்பத்தினர்.தகவல் மகன் தர்மேந்திரன் Witten-Germany




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விஜயின் மாஸ்டர் வசூலில் சாதனை படைத்தது!

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய், விஜய் சேதுபதி, நடித்து வெளியான படம் ‘ மாஸ்டர்’ .2020ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமே வெளியாகி இருக்க வேண்டிய இத்திரைப்படம், கொரோனா அச்சுறுத்தல் காரணமாக திட்டமிட்டபடி வெளியாகவில்லை. இதனால் ரசிகர்களுக்கு பொங்கல் விருந்தாக ஜனவரி 13ஆம் தேதி மாஸ்டர் வெளியாகியது.

குறிப்பாக, ‘மாஸ்டர்’ படக்குழுவினரைப் பாராட்டி சினிமார்க் மற்றும் ஏ.எம்.சி திரையரங்க நிர்வாகம் இந்தச் சிக்கலான காலகட்டத்தில் இவ்வளவு காலம் காத்திருந்து திரையரங்க வெளியீட்டை மட்டுமே முன்னிலைப்படுத்தி வெளியிட்டுள்ளதற்கும் நன்றி என்று தெரிவித்திருந்தனர். இது மட்டுமின்றி ‘ மாஸ்டர்’ திரைப்படம், இந்தியில் ரீமேக் ஆகவுள்ளது. திரையரங்குகளில் 50மூ இருக்கைகளுக்கு தமிழக அரசு அனுமதி அளித்த போதிலும், மாஸ்டர் வெளியான 2 நாட்களில் தமிழகத்தில் மட்டும் ரூ.43 கோடியை வசூலித்து மாஸ்டர் சாதனை படைத்திருந்தது.

இந்நிலையில் தற்போது மாஸ்டர் படம், உலக அளவில், வெற்றிகரமாக, சுமார் ரூ.100 கோடியை வசூலித்து சாதனை படைத்துள்ளது. மாஸ்டர் படம் வெளியாகி மூன்றே நாட்கள் ஆன நிலையில் மாபெரும் வெற்றியை பெற்றுத்தந்துள்ளது. இதற்கு முன்பாக, தளபதி விஜய்யின், துப்பாக்கி, கத்தி, தெறி, பைரவா, மெர்சல், சர்கார், பிகில், உள்ளிட்ட படங்களும் 100கோடி வசூலை ஈட்டித் தந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

---

30 ஆம் பக்கத் தொடர்ச்சி...

அளித்துள்ளன. ஆரம்பத்தில் இலங்கைச் சினிமா உலகும் பின்னர் தென்னிந்திய திரைப்பட உலகும் கவனிக்காது விடப்பட்ட இவரே பின்னால் கொண்டாடவும் பட்டார். அத்தோடு திரைப்படத் துறையில் 4 தேசிய விருதும், 3 மாநில விருதும், 2 பிலிம் பேர் விருதும், 2 நந்தி விருதும் பெற்றார். அவர் ஓர் தலை முறையையும் உருவாக்கியுள்ளார் இயக்குனர் பாலா, ஒளிப்பதிவாளர் சந்தோஸ் சிவன் ஆகியோர் அவர்களுள் முக்கியமானவர்கள், அதன் பின்னால் அவரின் வழியில் இன்று பலர் உருவாகியுள்ளார்கள். மகேந்திர அண்ணரை நான் நீண்ட நாட்களுக்குபிறகு 1998 இல் சென்னையில் சந்திக்கிறேன்., மிக மிக நீண்ட நாட்களின் பின் ஏறத்தாள 35 வருடங்களின் பின் அது ஓர் அற்புதமான உணர்ச்சிகரமான சந்திப்பு.



சில நிமிட நேரம் அவரது அணைப்புள் நான் உட்பட்டேன். பழைய நினைவுகளை மீட்டினோம். ஊரின் ஒவ்வொரு இடத்தையும் கேட்டார். ஊரின் புற்கள் இலைகள் நதிகள் மரங்களை நுணுக்கம் நுணுக்கமாகக் கேட்டார். இந்தப் பின்னணியில் அவரது பழைய நண்பர்களை அவர்களின் இன்றைய வாழ் நிலைமைகளை இன்னும் நுணுக்கம் நுணுக்குமாக வினவினார் மிகத் தேர்ந்த அனுபவம் மிக்க கமராக் கண்ணின் கேள்விகள் அவை.

அவர் எல்லாவற்றையும் அந்த கமராக் கண் கொண்டே பார்த்தார், அவரது படங்களில் இயற்கையும் மனித உணர்வுகளும் இடம் பெறுவதன் காரணம் எனக்கு நன்கு புரியலாயிற்று. அவரிடமிருந்து இளம் தலைமுறை கற்க வேண்டியவை இவை

1. சுய கற்றல் [ இது அவரது 5 வயது தொடக்கம் 15 வரை நடந்தது] 2. தேடிக் கற்றல் [ இது அவரது 20 வயது தொடக்கம் 25 வரை நடந்தது]3. முறையாகக் கற்றல் [ இது அவரது 25 வயது தொடக்கம் 30 வரை நடந்தது] 4. தனது வாழ்வனுபவங்களைபடமாக்குதல் [இது அவரது 30 வயது தொடக்கம் 60 வயது வரை நடந்தது 5. வாழ்வனுபவம், அறிவு மூலம் ஓர் ஞானியாக பரிணமித்தல் [ இது அவரது 70 வயதுக்குபிறகு நடந்தது] ஒரு கலையில் ஈடுபடும் ஓர் கலைஞனின் அதி உயர் நிலை அதுவாகவே மாறி ஓர் பற்றற்ற நிலை எய்துதல் என்பர். அறிஞர் பாலு மகேந்திரா அண்ணரை நினைக்கையில் இவ்வாக்கியமே ஞாபகம் வருகிறது. வாழும் வரை .கற்க வேண்டும் என்ற படிப்பினை அவரிடமிருந்து இத்தலைமுறை கற்றுக்கொள்ள வேண்டும். படிப்பு, கற்றல் என்பன இந்த இளம் தலை முறை வைத்திருக்கும் வெற்றுப் பானையை மிகவும் நிறைக்கும் . அதாவது அவர்கள் சட்டி நிறையும்.

சட்டியிலிருந்தால்தானே அகப்பையில் வரும் என்பது பழமொழி. இளம் தலை முறை அதி உயர் தொழிநுட்பம் எனும் தங்க அகப்பை வைத்திருந்தாலும் , தங்க சட்டி வைத்திருந்தாலும், சட்டியில் எதுவும் இல்லாது விடின் எதனைப் பரிமாறுவார்கள்? நிறைந்த பல் துறை வாசிப்பாலும் சிந்தனையாலும் வாழ்பனுவங்களாலும் விமர்சன சிந்தனையாலும் இளம் தலைமுறை ஆர்வலர்களின் சட்டி நிறைவதாக.

---

சிறுகதை:

## லால்பகதூர் முரளி

15 ஆம் பக்கத் தொடர்ச்சி...

டேய் வசந்திக்கு ஆரோ லவ்லெட்டர் குடுத்தினமாம் என்ற செய்தி பாடசாலை எங்கும் பரவியது. அது மட்டுமல்ல சாப்பாட்டு பாசல் கதை தெரியவர முரளிக்கு முன்னால் லால்பதூர் பெயரும் ஒட்டிக் கொண்டது. இப்போ முரளி அதிபரின் தண்டனைக்காக் காத்து நிற்கிறான். போபவர் வருபவர் எல்லாம் அவன் செய்தது எதோ கொலைக் குற்றம் போல் அவனைத் திட்டி தீர்த்துகொண்டு செல்கிறாங்கள்.

காலம் ஓடியது. வசந்திக்கும் முரளிக்கும் திருமணம் நடைபெற்றது. இருவரும் அனந்தமா இன்று வாழ்கின்றார்கள். இருவரும் ஒருவரை ஒருவர் அல்ல வேறு வேறு நபர்களை திருமணம் செய்து ஆனந்தமாக வாழ்கிறார்கள்.

இப்போது அவர்களக்கு வயது 70 . இருவரும் வட்சொப்பில் தினமும் கதைக்கிறார்கள், கதைப்பது மட்டுமல்ல வீடியோ கோலும் மாதம் ஒருமுறை எடுத்து கதைக்கிறார்கள். இன்றும் பாடசாலை நண்பர்களுக்கு லால்பகதூர் முரளி என்றால்தான் சட்டெனத் தெரியும். எந்த அதிபரும் இப்போ அவர்களைத் தண்டிப்பதில்லை.

அவர்களை மட்டுமல்ல. இளையவர்கள் வட்சப வைபர் என்றும் zoom என்றும் எதில் காதல் செய்தாலும் எவரும் கண்டுகொள்வதில்லை. இப்போ இலங்கையில் அதிபெரும்பான்மை வாக்குகளால் பல குற்றங்கள் குற்றமில்லை என்று ஆவதுபோல், காதல் என்பதும் உலகில் பெரும்பான்மை வாக்குகளால் குற்றமில்லை என்றாகிவிட்டது.








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# EurAsian-Tour

VALUTRANS MONEY TRANSFER

EurAsian-Tour Further Str.146 41462 Neuss

Rishi Ganeshamoorthy | Rishi 0174 96 44 965

Tel:02131 7387 83 Fax:02131 73 87 84 | info@eurasian-tours.com

# Jasmine Silk House

என்றும் எம்முடன் இணைந்து இருங்கள். உங்களுக்கு சேவை செய்ய காத்திருக்கிறோம்.
தொடர்பு இலக்கம்: 01731937325

ஆடைகளின் ராணி

Tel: 02102 844744
HP: 0173 1937 325

"Jasmine Silk House"
Fester Str.50- 40882 Ratingen

# Asia Bazar

துரித பணமாற்றுச்சேவை

ஆசிய, ஆபிரிக்க உணவு வகைகள் வியாழன், சனிக்கிழமை தோறும் இலங்கை, இந்திய உடன் மரக்கறிவகைகள் கடல் உணவுப் பொருட்கள் இன்னும் பல...

Ria Money Transfer | VALUTRANS MONEY TRANSFER | MoneyGram

உரிமையாளர்: பா.கணேஷ்

An der Stadt Mauer 2-4 41061 Mönchengladbach

Tel: 02161 208303 | Fax: 02161-309282

# Pirruntha Silks

Exclusive Indian Clothing & Jewelry

Ludwig str.87a
70197
Stuttgart

தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும் நவீன டிசைன்களில் அமைந்த சேலைகள் மற்றும் இமிற்றேசன் நகைகள் அனைத்திற்கும் நீண்ட கால நம்பிக்கை மிக்க ஸ்தாபனம் பிருந்தாஸ்

Stuttgart நகரில்...

Tel: 0711 615 8976/ 0170 334 4059

# Shakthy Foundation

துவாரகமாய் முதியோர் இல்லம்

தொடர்புகளுக்கு:-
Dwarakamal Senioren WG
Alpenroder Str.59 65936 Frankfurt am Main, Germany
Tel: 0152-14069504 Mrs.Nava (Resha)

சீரடி பாபாவின் அருளால் ஜேர்மனி பிராங்க்பர்ட் நகரில் 01.10.2020 ஆம் திகதி துவாரகமாய் முதியோர் இல்லம் உருவாகியுள்ளது. எமது அன்பார்ந்த சகோதர சகோதரிகளே உங்களுக்கு ஓர் நற்செய்தி. உங்கள் பெற்றோரை உங்களைப் போலவே அன்பாக அரவணைத்து பராமரிப்போம் கவலையை விடுங்கள் பிராங்க்பர்ட் நகரில் 01.10.2020 ஆம் தகதி முதல் துவாரகமாய் முதியோர் இல்லம் அமைந்துள்ளது. இங்கு தமிழில் உரையாடி நமது தமிழ் உணவுடன் முதியவர்கள் பராமரிக்கப்படுகின்றார்கள். இதற்கு அருகாமையில் அழகான பூங்கா மற்றும் ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயம் மற்றும் சித்தி விநாயகர் ஆலயம் அமைந்தள்ளது. இல்லத்தினால் பெறும் வருமானங்கள் 28.03.2018 திரு. திருமதி. நவநீதன் நிஷாந்தியாவினால் இலங்கையில் உருவாக்கப்பட்ட மாணவர் விடுதிக்கு செலவு செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்விடுதியில் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள பல மாணவர்கள் கல்வி கற்று வருகின்றார்கள்.

Shakthy Foundation T/M/Chennaiyoor, Central College, Mutur, Trincomale, Srilanka. | S.Rajathurai: +94 77 338 4637

Shakthy Foundation
Acc No: 173020027815
HATTON NATIONAL BANK
Trincomale, Srilanka

# SARAVANAA BHAVAN®

WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN

069-97 693 374
info@saravanaabhavan.de
kaiserstraße 68, 60329 Frankfurt am Main

புதிய இடத்தில்!! புதிய பொலிவுடன்!!

India | Singapore | Malaysia | Thailand | Hong Kong | U.A.E | K.S.A. | Oman | Qatar | Bahrain | Kuwait | U.K | France | Germany | Australia | South Africa | Canada | U.S.A

# STAR IMPEX

Lebensmittel Grosshandel e.K.

StaR Impex : Inh : K.Sivasubramaniam

Tel: 0231 860 26 96

AGAM | Nila | Double Horse | Aachi | BTM | Rabeena

Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696| Fax: 0231/8602698




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org